ஞாயிறு வெளியீடு. விலை 0–1–3. REGD. No. M. 4642.

திராவிடநாடு

மலர் 3. | 11–2–45 | இதழ் 47.

குற்றத்தை மறைக்கும் குருட்டறிவு

ஈழத்தடிகள் பி.ஏ.,

இனிப், பரமனூர் கட்டளைப்படி பார்
தியார் தமது துணைமுலைகள் பொழி
ன்ற பாலைப் பொற்கிண்ணத்தில்கறந்து
ம்பந்தருக்கு ஊட்டி அழுகையைமாற்றி
ள் என்று முன்னர் குறிப்பிட்டதை
ன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள்
ன்று நம்புகிறேன். பாலுண்ட எச்சில்
ாயோடு குளக்கரையில் நின்ற குழந்
தையை நோக்கி, நீயார் தந்த பாலை
ண்டாய்' என்று சிவபாதவிருதயர் (சம்
ந்தரின் தந்தை) கேட்டதற்குத் 'தோடு
டைய செவியன் தந்த பாலை உண்டேன்'
ன்று சம்பந்தர்கூறினார்என நாம்குறிப்
பிட்டதும் அன்பர்களுக்கு நினைவிருக்க
ாம். தோடுடைய செவியன் என்பதற்
குப் பொருள் என்ன என்பதையும் சிவ
இலக்கணம் கூறுகின்றபடியே நாமும்
குறிப்பிட்டு அதற்கு விளக்கமும் தந்துள்
ளோம். அவ்விளக்கத்தின் தொடர்ச்சியே
இங்கு வரையப்படுவதும்.

எனவே, பெரியபுராணம் பாடியசேக்
கிழார் கூற்றுப்படி, சம்பந்தருக்குப் பால்
கொடுக்கவந்தவர் இருவர் என்று ஏற்படு
கின்றது. எப்படியென்றால், சம்பந்தரின்
அழுகைகேட்ட சிவன், அருகிருந்த

"அருமறையாளுடையவளை
அழைத்தருளி அருள்செய்வார்"

என்பதும்,

"எவ்வுலகும் தொழுகின்ற மலைக்
கொடியைப் பார்த்தருளி"

என்பதும்,

"சென்றணைந்து, வாரிணங்கு
திருமுலைப்பால் வள்ளத்துக்
கறந்தருளி"

என்பதும்,

சம்பந்தருக்குப் பால்கொடுக்கவந்தவர்களைப்பற்றிச் சேக்கிழார்கூறும் விளக்கங்களாகும். இவ்விளக்க உரைகளை ஆதாரமாக வைத்து ஆராயும்போது, சம்பந்தரின் அழுகைகேட்ட சிவன் தனியாகவே இருந்தார்என்பதும், அவ்வழுகையொலியும் சிவனுடைய செவிகளுக்கு மட்டுமே எட்டியதென்பதும், பக்கத்திலிருந்த அம்மையாருக்கு அதுகேட்கவில்லை யென்பதும், சிவன் அம்மையாரைஅழைத்தருளி அருள்செய்தபின்னரே,சம்பந்தர் அழுதது அம்மையாருக்குத் தெரியவந்த தென்பதும், அதன்பின்னரே, இருவருமாகக் காளைமீதமர்ந்து குளக்கரைக்கு வந்து, அழுகின்ற குழந்தைக்கு அருளமுதம் ஊட்டினர் என்பதும் பெறப்படுகின்றது. இதனால், பரமசிவனும் பார்வதியும் அவரவர்க்குரிய ஆண் பெண்வடிவங்களோடு தனித்தனியாகவே இருந்தனர் என்ற உண்மை தெளிவாகின்றது. ஆனால் இந்த உண்மையைச் சம்பந்தர் வாயிலாகக் கேட்கும்போது, அது இதற்கு மாறுபடுகின்றது. சம்பந்தரால் பாடப்பெற்ற 'தோடுடைய செவியன்' என்ற பாடலை நோக்கும்போது, சேக்கிழாரால் கூறப்படும் பரமனுக்கும் பார்வதிக்குமுள்ள தனித்தனி வடிவங்களை மறுப்பதோடு இல்லாமல், அவ்விருவரும் ஆணும் பெண்ணுமாக ஒரே வடிவத்திலேயே உள்ளனர் என்பதையும் நன்குவலியுறுத்துகின்றது. இவ்விருவரில் யார் கூறுவதை உண்மையாகக்கொள்வதென்பது தெரியவில்லை. சேக்கிழார் கூறும் இருவடிவங்களையா? சம்பந்தர் கூறும் ஒரு வடிவத்தையா? சேக்கிழார் கூறுவதைப் பார்த்தால், சம்பந்தர் பாலுக்காக அழுததும், பின்னர் அவருக்குப்பால் கிடைத்ததுமானநிகழ்ச்சிகளை உடனிருந்து நேரில் பார்த்தவர்போல் மிகவும்தெளிவாகக் கூறியிருக்கிறார்.

"சம்பந்தர் தம் கண்களைக் கைகளாற் பிசைகின்றார்; வாய்துடிக்கின்றது; பொருமி அழுகின்றார்; அம்மே அப்பா என்றழைக்கின்றார்; அம்மையும் அப்பனும் வருகின்றனர்; அப்பன் ஆணைப்படி அம்மை தன் துணைமுலைகள் பொழிகின்ற பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து ஊட்டுகின்றாள்; அப்பன் அழுகைமாற்றி அருள்புரிகின்றான்"

என்றெல்லாம் சேக்கிழார்உடனிருந்து பார்த்தவர்போல் ஒன்றும் விடாமல் எடுத்து ஒப்புவித்து இருக்கிறாரே! இதை நாம் பொய் என்று சொன்னால், சேக்கிழார் அன்பர்கள் எம்மீது சீற்றங்கொள்வார்களே! என்றெண்ணி இருக்கையில், 'நீ அஞ்சாதே, நான் இருக்கிறேன் உனக்குத்துணையாக' என்று கூறுவதுபோல்

(2-ம் பக்கம் பார்க்க)

குற்றத்தை மறைக்கும்

1-ம் பக்கத் தொடர்ச்சி.

தோடுடைய செவியன் என்ற பாடல் என்முன்னேவந்து நின்று, 'எனக்குப் பால் கொடுத்தவன் தோடுடைய செவியனாகிய அர்த்தநாரீசுவரரே யன்றிச், சேக்கிழார் கூறும், ஆண்வேறு-பெண் வேறாகவுள்ள அந்தக்கடவுளரல்ல' என்று சம்பந்தர் கூறுவதுபோல் காட்சியளிக்கிறது.

எனவே, சம்பந்தர்கூறும் தோடுடைய செவியன் என்றபாடலை ஆதாரமாக வைத்தே, அவர்பாலுண்ட நிகழ்ச்சியை ஆராய்வது முறையாகும். என்றாலும், 'சம்பந்தர்கூறும் தோடுடைய செவியனல்லஅவருக்குப்பால்கொடுத்தவர், நான் கூறும், ஆண்வேறு—பெண்வேறாகவுள்ள அந்த இரண்டு கடவுளருமே அவருக்குப் பாலூட்டி அருள்புரிந்தனர்' என்று சேக்கிழார் கூறுவதுபோல், 'துணைமுலைகள் பொழிகின்றபால்' என்ற அவரதுபாடல் என்முன் வந்துநின்று என்னைத்திக்குமுக்காடச்செய்கின்றது. சம்பந்தர் கூறும் தோடுடைய செவியனுக்கு இருப்பது ஒரு முலைதானே, சேக்கிழார் இரண்டு முலைகள் என்கின்றாரே, அப்படியானால் சேக்கிழார்கூறுவதுதான் ஒருக்கால்மெய்யாய் இருக்கலாமோ என்று எண்ணுகையில், "இல்லை! இல்லை! சேக்கிழார் கூறுவது ஒருக்காலும் மெய்யாய் இருக்கமுடியாது! சேக்கிழார் பாடியது புராணமே! புராணத்தில் புளுகும் புனைவும்தான்இருக்கும், உண்மையே இருக்காது; சைவத்துட்புராணம் புகுந்துதான் மக்களுக்குப் பெரும் குழப்பத்தை உண்டாக்கி விட்டது; புராணமேசைவத்தின் திறவுகோல் என்று பலர் கருதினர்; பேசினர்; நடைமுறையில்வைத்து இடருற்றனர்; புராணத்தால் சைவத்திற்கு ஏற்பட்ட இழுக்குச்சொல்லுந்தரமன்று' என்பதாகச் சைவத்திற் சீர்திருத்தம் கண்டுபிடித்த மெய்கண்டார் குழாங்கள் கூறுகின்றனரே! என்செய்வது என்றெண்ணி நிற்கையில், "அவர்கள்கூறுவதைநம்பாதே! மெய்கண்டார் குழாங்களின் கூட்டங்கள் பலவற்றுக்கு நான் போயிருக்கிறேன்; அந்தக்கூட்டங்களில் எல்லாம் புராணச் சொற்பொழிவுகளே நிகழ்வதை நான் பார்த்திருக்கிறேன்; அவர்களுக்குத் தெரிந்த பகுத்தறிவாளர் யாராவது அக்கூட்டத்தில் இருப்பதைப் பார்த்துவிட்டால் மட்டும், 'நாங்கள் சொல்வதல்ல, புராணம் கூறுகின்றது, நம்புவதும் நம்பாததும் உங்கள் அறிவையும் நிலைமையையும் பொறுத்தது, நாங்கள் புராணத்தில் இருக்கின்றதையே சொல்லுகின்றோம்' என்று நயமாகப்பேசி நழுவிவிடுவதைப் பார்த்திருக்கிறேன்; ஆனால்,பலபகுத்தறிவாளர் நடுவில் ஒரு மெய்கண்டார் மட்டும் தனியாகச் சிக்கிக்கொள்வாரானால், 'நான் புராணங்களை நம்புவதே கிடையாது; நீங்கள்இப்போது கூறும்கருத்துக்களை நான்பல ஆண்டுகளுக்கு முன்னரே தெரிந்து அதன்படி நடக்கிறவனுக்கும்! இந்தப்பாழாய்ப்போன வைதிகச்சைவக் கும்பலுக்கு நாம் (பகுத்தறிவாளரையும் தம்மையும் சேர்த்து) கூறும் உண்மைகளைப் புரிந்துகொள்ளவே முடியாது' என்று கூறுவார்; 'புராணங்களை நம்புவதில்லை, அன்பே சிவம் என்று கூறும் நீர் புராணங்களிற்கூறப்படுகின்ற திருநீற்றை உம்முடைய நெற்றியிலும், அக்கமணியைகழுத்திலும்அணிந்திருக்கிறீரே, அது ஏன்?' என்று கேட்கும் சமயத்திலேஇன்னொரு மெய்கண்டார் அந்தப்பக்கமாக வருவார்; வந்தவர், பகுத்தறிவாளரிடம் பேசிக்கொண்டு நின்ற மெய்கண்டாரை நோக்கி, 'அன்பரே நேரம் ஆய்விட்டதே! கூட்டம் தொடங்கியிருக்குமே! வாரும் போகலாம்' என்றுநின்றமெய்கண்டாரை வந்த மெய்கண்டார் வகையாக அழைப்பார்; 'எங்கேகூட்டம்? என்ன கூட்டம்?' என்று அங்குபேசிக்கொண்டு நின்றபகுத்தறிவாளர் கேட்டால், 'உங்களுக்குத் தெரியாதா? எனது நண்பரோடு நீங்கள் பேசிக்கொண்டிருந்ததால் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்றல்லவா நினைத்தேன்; இன்றுமெய்கண்டார் கழகத்திலே பெரிய புராணச் சொற்பொழிவு, பல சைவ மெய்யன்பர்கள் பேசுகின்றனர், இவர் (புராணத்தை நான் நம்புவதில்லை என்று பகுத்தறிவாளரிடம் பேசிக்கொண்டு நின்றவரைச் சுட்டிக்காட்டி) 'இயற்பகைநாயனார்' என்னும் பொருள் பற்றிப் பேசுகின்றார், என்பார்; நின்றவர், வந்தவரோடு வழிநடந்து விடுவார். வந்தவருக்குத்தெரியாது வழியிற் பேசிக்கொண்டு நின்றவர்கள் பகுத்தறிவாளர் என்பது. எனவே, இந்த முறையில்தான் புராணத்தைவெறுப்பதாகக்கூறிக்கொள்ளும் மெய்கண்டார் குழாங்கள், தங்களுடைய சைவத்திற் சீர்திருத்தம்காணும் வேலையைச்செய்வார்களேயன்றி,இதற்குமேல் அவர்களிடமிருந்து எதுவும் எதிர்பார்க்க முடியாது; ஆகையால் அவர்களின்சீற்றத்திற்கு இலக்காவேனே என்ற அச்சம் உனக்கு வேண்டாம்" என்று எனது நண்பர் கூறினார். எனக்கும் அப்போதுதான் இவர்களின் உண்மை வடிவம் நன்கு புலப்பட்டது. இவர்களிற் பெரும்பாலார் நம்முடைய கூட்டங்களில் வந்துகலந்து கொள்ளும்போது, தங்கள் நெற்றியை இயற்கையாய் வைத்துக்கொள்வதையும், அவர்கள் சார்பில் நடக்கும் கூட்டங்களிற் போய்க்கலந்து கொள்ளும்போது நெற்றியில் நீற்றைப் பூசிச்செயற்கைப் படுத்திக்கொள்வதையும் நான் பலதடவைகளில் பார்த்திருக்கிறேன்; ஆனால் இவர்களில் ஒருவர் இருவராவது சொல்லிலும் செயலிலும் ஒன்றுபட்டிருக்க மாட்டார்களா என்று எண்ணியதுண்டு. அந்த எண்ணத்திலும் மண் போட்டார் என் நண்பர்.

எனவே, இருவரில் சம்பந்தர் சாற்றுவது உண்மையா? சேக்கிழார் செப்புவது உண்மையா? என்ற ஐயப்பாடு இதனால் ஒருவாறு நீங்கப்பெற்றுச், சம்பந்தர் சாற்றியவழிச்சென்று ஆராய்வதே சாலச்சிறந்தமுறையாம் என்ற முடிவுக்கு வந்தேன், ஏனென்றால், சம்பந்தர் அம்மையார்அளித்த அறிவுப்பாலையுண்டு அப்பன் அருளை அப்போதேபெற்று அரைநொடியில் அருட்பாடல்மழைபொழிந்து அருமைத்தந்தைக்கு அற்புதவிடையளித்தவரல்லவா! தமக்குப் பாலூட்டிய பரமனையும் பார்வதியையும்,கனன்றெழுந்து கசையடிகொடுத்த தந்தைக்குக் கண்கூடாகக்காட்டியவரல்லவா!மழலைமொழியாலன்றி மன்பதைவியக்கக்கூடிய முறையில், மாசற்ற கல்விகற்ற ஒருவர் கசடறமொழிவதுபோல்—கடல் பெருக்கெடுத்தோடுவதுபோல்-கவிபாடுந்திறமையைப் பெற்றவரல்லவா! இப்படிப்பட்டவர் கூறியதைப்பொய்யென்று புறக்கணித்துவிடலாமா? கூடாது. எனவே, சம்பந்தர் கூறிய தோடுடையசெவியனையே துணையாகக்கொண்டு, எமது ஆராய்ச்சியைத் தொடர்ந்துமுடிப்பாம். "நில்லும், நில்லும்! நீர் இந்த முடிவுக்குவந்ததேதவறு. சம்பந்தர்மட்டுமா சிவனுடைய அருளைப் பெற்றார்? நீர்கண்ட உண்மை இவ்வளவுதானா? சேக்கிழார் சம்பந்தருக்குப் பின் வாங்கியவரென்றா நினைத்தீர்? சேக்கிழாரும் சம்பந்தரைப்போலவே சிவஅருளைப் பெற்றுத்தான் பெரியபுராணத்தைப் பாடினார். அலகில் சோதியனாய்—அம்பலத்தாடுகின்ற-நிலவுலாவுகின்ற நீர்மலிவேணியன் எவனோ, அவனன்றோ, மலர்சிலம்படியை வாழ்த்திவணங்கிநின்ற சேக்கிழாருக்கு "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" என்று அடியெடுத்துக் கொடுத்து, அடியார்தம்பெருமையை அவனிக்கு உரைத்திடுக என்று ஆணையிட்டார். இது உமக்குத்தெரியவில்லையே! இவ்வளவுதானா உமது ஆராய்ச்சித்திறன்?" என்று சேக்கிழாரின்மொழிகளைச் செம்மையாகப்பின்பற்றி இம்மியளவும் பிசகாதுநடக்கும் பெரியவர் ஒருவர், எனதுமுடிவுக்குமுற்றுப்புள்ளிவைக்கும் முறையில்போட்டார் ஒருபோடு. நான் திகைத்துப்போனேன். இந்த நேரத்தில், இன்னொரு சைவமெய்யன்பர் நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தஇடத்துக்குவந்தார்; எங்கள்உரையாடலை உற்றுக்கேட்டார்; கொல்லென்றுநகைத்தார்; அவருடையநகைப்பு எங்களை நடுநடுங்கச்செய்துவிட்டது. வந்தவர் எங்கள் இருவரையும் ஒருமுறை ஏறஇறங்கப்பார்த்துவிட்டு, "நீங்கள் இருவரும் பேசிக்கொண்டுபோகும் போக்கைப்பார்த்தால், உங்கள் பேச்சுக்கு எல்லையேஏற்படாதுபோல்தெரிகிறதே! உங்கள் உரையாடலுக்கு அடிப்படைக்காரணம் எதுவோ, அதை அறவேமறந்தன்றோ உலகத்தைச்சுற்றிவருவது போலப் பேசிக்கொண்டுபோகின்றீர்கள்,

(11-ம் பக்கம் பார்க்க)

★ விடுதலை இலக்கியம் ★

"விடுதலை இலக்கியம்" என்ற இக்கட்டுரை, கலைப்புரட்சிக்காக நாம் புராண இதிகாசங்களைப் பொசுக்கும் போக்கு, இலக்கியத்திலே மறுமலர்ச்சியை உண்டாக்குகிறது என்பதற்கு அறிகுறியாக இருப்பதால், இதனைநாம் வரவேற்கிறோம்—ஆசிரியர்.

சமீபகாலமாகத்தமிழ்இலக்கியத்தைப் பற்றிய சிந்தனை எல்லாருடைய மனத்தையும் அலைத்து வருகிறது. எந்தமாதிரியான இலக்கியம் தேவை? இதுதான் கேள்வி.

* * * *

எந்தமாதிரி இலக்கியம் தேவை? யாருக்கு? நமக்கு! நாம் என்றால் யார்? தமிழராகிய நாம்.

* * * *

நமது தேவையை எப்படி அறியமுடியும்? நமது நிலைவரம் முதலில் தெரிய வேண்டும். நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை அறிந்தால்தானே நமது தேவையை நிர்ணயிக்க முடியும்?

நாம் அடிமைநிலையிலிருக்கிறோம். அடிமைப் பட்டுக்கிடக்கிறோம். அரசியலில்அடிமை! பொருளாதாரத்தில்அடிமை! சமூகத்தில் அடிமை! இந்த மூன்று வகையிலும் அடிமைப்பட்டிருக்கிறோம்.

ஆக, இம்மூன்றுவகை அடிமைத்தனத்தையும் ஒழிக்கும் இலக்கியம் எதுவோ அது நமக்குத்தேவை. இன்னும் சிறிது விரிவாகப் பேசலாம்.

இலக்கியம் இலக்கியம் என்று சொல்கிறார்களே! இதன் செயல்தான் என்ன? இதன்நோக்கம் என்ன?

வாழ்க்கையை உயர்த்துவது இலக்கியத்தின்நோக்கம். மனுஷ்யத்தன்மையை உயர்த்துவது இலக்கியத்தின் நோக்கம். வாழ்க்கையை உயர்த்துவது மனுஷ்யத்தன்மையை உயர்த்துவது என்றுசொன்னால் இப்போதுள்ள வாழ்க்கை திருப்தியளிக்கவில்லை என்றுதானே அர்த்தம்? அதிலே மனுஷ்யத்தன்மை அவ்வளவாக இல்லை என்றுதானே பொருள்?

ரொம்பச் சரி! இப்பேற்பட்டதொரு வாழ்க்கை முறையைஆழக்குழிவெட்டிப் புதைக்கும் இலக்கியம் தேவை என்றுதான் நாம் சொல்கிறோம்.

வாழ்க்கை முறையில் அதிருப்தி ஏற்படக் காரணம் என்ன? நமது சமூக அமைப்புத்தான். நமது சமூக அமைப்பு இப்படிச் சீர் கெடக்காரணம் என்ன? பொருளாதாரப் பித்தலாட்டம். பொருளாதாரத்தில் பித்தலாட்டம் ஏற்படுவானேன்? அரசியலில் தில்லுமுல்லு நுழைந்ததால்.

ஆக, நமதுவாழ்க்கை, சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எல்லாவற்றிலும் அடிமைத்தனம் புரையோடிவிட்டது. இந்த அழுகலை ஒழிக்கக் கூடிய இலக்கியம் தேவை என்றுதான் சொல்கிறோம். இங்கேதான் பல நண்பர்கள் மருட்சி கொள்கிறார்கள்.

* * * *

"ஐயய்ய! இலக்கியத்திலே அரசியலைப் புகுத்தினால் அதுவெறும் பிரசார இலக்கியமாகிவிடுமே! சீச்சீ!" என்கின்றனர் மற்றுஞ் சிலர்.

ஐயா! இலக்கியத்தின் ஜோலி என்ன? பிரசாரம். உலக இலக்கியங்களைஎல்லாம் ஆராய்ந்து பார்த்தால் முக்கால்வாசி பிரசார இலக்கியந்தான். நம் இலக்கியத்தை எடுத்துக்கொள்வோம். ராமாயண மகாபாரதங்கள் எல்லாம் பிரசார இலக்கியம் அல்லாது வேறு என்ன? பாஷையின் உற்பத்தியே பிரசாரம்தானே! இலக்கியத்தின் லக்ஷியம் வாழ்க்கை முறையை உயர்த்துவது — மனுஷ்யத்தன்மையை உயர்த்துவது—என்று சொன்னால்—பிரசாரம் மூலமாகத்தானே அதைச்செய்ய முடியும்? ஆகவே பிரசார இலக்கியமாகிவிடுமே என்று மருள வேண்டியதில்லை.

* * * *

இந்த தேசம் அரசியல் விடுதலைபெற்றுவிட்டால் மாத்திரம் போதாது. அது ஒன்றினால் மாத்திரம்மக்களின்வாழ்க்கை முறை உயர்ந்துவிடாது. பொருளாதார விடுதலையும் வேண்டும், சமூகவிடுதலையும் வேண்டும்.

அரசியல்வாதி, அரசியல் விடுதலைநோக்கிச் செல்லும்போது, மற்றவர்கள்என்ன செய்யவேண்டும்? பொருளாதார, சமூக விடுதலைக்காகக் கிளர்ச்சி செய்யவேண்டும். அது அரசியல்வாதிக்குமிக்க உதவியாயிருக்கும். அதுமாத்திரமல்ல, அரசியல் வாதியின்உழைப்புக்குப்பரிபூரணவெற்றியளிக்கும்.

இலக்கியமுனை, கலைமுனை, மென்கலைமுனை, பொருளாதார முனை, சமூக முனை, ஆகிய பல்வேறு முனைகளிலும் நின்று தேசவிடுதலைக்கு அந்தரங்கப் பிரார்த்தனை பண்ணும் அன்பர்கள் கவனிக்க.

* * * *

நமது தேசம் அடிமைப்பட்டு நீண்ட காலமாகிறது. நமது மக்களின் அறிவுச் சுதந்திரம், அரசியல் சுதந்திரம், எல்லாம் பறிபோய்ப் பல காலமாகின்றது. அடிமைத்தனத்தின் விதைஎது தெரியுமோ? தன்னம்பிக்கையில்லாதிருப்பதுதான்.

எந்தச்சமூகம் தன்னுடைய பலத்திலே நம்பிக்கையில்லாதிருக்கிறதோ-எந்தச்சமூகம் தனது சொந்த முயற்சியிலே உறுதிகொள்ளாது விதி என்றும், அதிர்ஷ்டம் என்றும் சொல்கிறதோ—எந்தச் சமூகம் பௌருஷத்தை இழந்து நிற்கிறதோ— அந்தச்சமூகம் அடிமைத்தனத்திலிருந்து மீள்வது அரிது.

தன்னம்பிக்கை யின்மையாலே அடிமைத்தனம் ஏற்பட்டது என்று கூறினோம். அப்படியானால் அடிமைத்தனத்தைஒழிக்க உபாயம் எது? தன்னம்பிக்கையூட்டுவது. சூரியன் வந்தால் இருள் தானே விலகாதா? தன்னம்பிக்கை ஏற்படுமானால் அடிமை விலங்குதானே முறியாதா? ஆகவே, அரசியலில் கலவாது தேசவிடுதலைக்கு உழைப்பவர்கள் மக்களுக்குத் தன்னம்பிக்கை யூட்டினால் அது விடுதலைக்குழைப்பதாகும்.

ஆனாலோ, இலக்கியத்திலே தீண்டாமை பாவிக்கும் அன்பர்கள் அப்படிச் செய்கிறார்களா? இல்லை. "நமதுசக்தியில் என்ன ஐயா இருக்கிறது? எல்லாம் விதி. விதி வலிது. விதியின்முன் மனிதன் எம் மாத்திரம்?" இப்படியெல்லாம் சொல்வதும்-இம்மாதிரி கருத்துப்படக்கதைஎழுதுவதும்-நமது மக்களுக்குத் தோல்வி மனப்பான்மையுண்டுபண்ணும். தோல்வி மனப்பான்மையே அடிமைத்தனத்துக்கு ஆணிவேர்.

* * * *

'விதி விதி' என்று பயப்படுவதெல்லாம் கையாலாகாதவன் பேசுகிற வார்த்தை. சோம்பேறிப்பேச்சு. ஓயாமல், சலியாமல் உழைப்பதற்கு முடியாதவன் தனது சோம்பேறித்தனத்தை— பேடித்தனத்தை — போர்த்திக்கொள்ள உபயோகிக்கும் போர்வை விதி.

* * * *

இந்த உலகத்திலே நம்மால் செய்யமுடியாதது ஒன்றுமில்லை. மலைகளைத் தாவுகிறான் மனிதன், கடல்களை அளக்கிறான் மனிதன், வானத்திலே பறக்கிறான் மனிதன், நதிகளின் போக்கையேதிருப்புகிறான் மனிதன், உலகத்தையே ஆட்டிவிடுகிறான் மனிதன்.

வாரீர் மனிதர்களே! நம்மால் ஆகாதது ஒன்றுமில்லை. நாம் செய்வோம்; செய்தே தீருவோம்.

பஞ்சத்தை ஒழிப்போம்! பசியைப் போக்குவோம். நோயை ஓட்டுவோம். அறியாமையைப்பொசுக்குவோம்! 'விதி' என்ற மாயையைப்பிளப்போம். விடுதலை பெறுவோம். தன்னம்பிக்கையூட்டுவோம்! சிதைந்த பார்த்தைஒருங்கு சேர்ப்போம். வீழ்ந்தமக்களை வாழவைப்போம். சுசந்த வாழ்வை இனிதாக்குவோம்.

(நவசக்தி ஆண்டு மலர்)

மாணவர் எழுச்சி.

3—2—45ல் புதுப்பேட்டையில் புதிதாயமைக்கப்பட்டதும், புதுவை பி ஆர். கம்பனி சாயத்தொழிற்சாலைஉரிமையாளர் தோழர் பி. இராமலிங்கனாரால் தயாரிக்கப்பட்ட இயக்கக் கொடிகளால்அலங்கரிக்கப்பட்டதுமான பன்னீர்ச் செல்வம் பந்தலில் தென்னாற்காடு மாவட்டத்திராவிடமாணவர் மாநாடு தொடங்கப்பெற்றுத்தோழர் எ. பி. சனார்த்தனம் திராவிடமாணவர் இயக்கத்தின் மாண்பை விளக்கி மாணவர் கொடியை ஏற்றி வைத்தார்.

அண்ணாமலைப்பல்கலைக்கழக மாணவத் தோழர் இ. ரெ. இளம்வழுதி திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியத்தையும், திராவிட மாணவர் கடமையை விளக்கியும் விரிவுரையாற்றிமாநாட்டைத்திறந்து வைத்தார்.

புதுப்பேட்டைத் தோழர் எஸ். கோவிந்தசாமி தமது வரவேற்புரையைநிகழ்த்தியதன்பின் மாணவமணி தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்களை மாநாட்டிற்குத்தலைமை வகிக்கும்படிமுன்மொழியத், தோழர்கள் அன்பழகன், சேலம் எ. சித்தையன், போளூர் சுப்பிரமண்யம், அண்ணாமலை ந க ர் நன்னன், தில்லைப்பகுத்தறிவுப் புலவர் நா. மு. மாணிக்கம் ஆகியோர் வழிமொழிய தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் பெருத்த ஆரவாரத்திடையே தலைமைத்தாங்கி உணர்ச்சியும் எழுச்சியும்மிக்க தமது தலைமையுரையையாற்றினார்.

பின்பு கரந்தைக் கல்லூரி விரிவுரையாளர் தோழர் கோ. சி. பெரியசாமிப் புலவர் காங்கிரஸ், மக்களை ஏமாற்றிவாக்குகள்பெற்று வெற்றியுற்றப்பின்னர் மக்களுக்கிழைத்த இன்னல்களை எடுத்துக் காட்டித்திராவிடநாடு தனி நாடாக்கப் படவேண்டியது அவசியமென்பதை அறிவுறுத்தினார்.

பிறகு, பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் ஆரியக்கலையால் நாட்டில்நிலவிவரும் அல்லல்களும், அளவற்ற அட்டூழியங்களும் அறவே ஒழிக்கப்படவேண்டுமென்றும் தமது வடநாட்டுச் சுற்றுப்பயணத்தில் தாம் சென்ற இடங்களிலெல்லாம் தன் மதிப்புணர்ச்சியே தாண்டவமாடுகின்றதென்பதையும் விளக்கிச் சுமார் 2-மணி நேரம் பேசினார்.

மாநாடு பகல் உணவுக்காகக் கலைந்து மீண்டும் பிற்பகலில் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் மதியழகன், இளஞ்செழியன், இப்ராகீம், வீரமணி, சனார்த்தனம், காஞ்சி கலியாணசுந்தரம் ஆகியோர் பல தீர்மானங்களைக்கொண்டுவர யாவும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

பின்பு தோழர் அண்ணாத்துரை திராவிடர்கழகக் கொள்கைகளை விளக்கியும் வடநாட்டுச் சுரண்டுதலிலிருந்து தப்புவதற்குத் திராவிடநாடு பிரிந்தே தீரவேண்டுமென்றும் வலியுறுத்திப் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் புதுப்பேட்டை வெ. வைத்தியலிங்கம் நன்றி கூற மாநாடு இனிது முடிந்ததும் திருவாரூர் இளந்திராவிட இசைவாணர் தோழர் டி.வி. நமச்சிவாயம் இன்னிசை விருந்து நடத்தினார்.

பிறகு பெரியார் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அண்ணாத்துரை, விழுப்புரம் பாலகவி அப்துல்வகாப், அன்பழகன் ஆகியோர் பேசினர்.

பலதோழர்கள் எழுதியனுப்பியவினாக்களுக்குத் தலைவரால் தக்கவாறு விடையிறுக்கப்பட்டன.

தோழர்கள் புதுவை பாரதிதாசன், சென்னை வி. குருசாமி, பண்டித எஸ். எஸ். ஆனந்தம், குடந்தை சொக்கப்பா, எம். பி. வடிவேலு, தஞ்சைத்திராவிட இளைஞர்கழகம் ஆகியோர் அனுப்பிய மாநாட்டுவாழ்த்திதழ்கள்வாசிக்கப்பட்டுத் தோழர் ஆர். திராவிடமணி நன்றிகூறக் கூட்டம் கலைந்தது.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப் புதுப்பேட்டைத் திராவிட இளைஞர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிதும் போற்றத்தக்கது.

தென்னாற்காடு மாவட்டத் திராவிட மாணவர் மாநாட்டு வாழ்த்து.

[பாரதிதாசன்]

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலிஎனச் செயல்செயப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி!
இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?
கைவிரித் துவந்த கயவர், நம்மிடைப்
பொய்வி ரித்துநம் புலன்கள் மறைத்துத்
தமிழ்க்கு விலங்கிட்டுத் தாயகம் பற்றி
நமக்குள உரிமை தமக்கென்பார் எனில்,
வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!
இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும்
புகழ்ச்சியே எம் பூணும் என்றும்
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும்உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு!
நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு!
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வையு யர்த்துக!
கைக்குள திறமை காட்ட எழுந்திரு!
வாழ்க இளைஞனே, வாழ்க நின்கூட்டம்!
வாழ்க திரவிட நாடு!
வாழ்க நின்வையத்து மாப்புகழ் நன்றே.

—:(o):—

வேள்ளியக்குடி

6—1—45ல் எ. தங்கவேல் தலைமையில் ஒரு கூட்டங்கூடிப் பகுத்தறிவு விளக்கக் கழகம் என்பதைத் "திராவிடர் கழகம்" எனமாற்றியமைக்கத்தீர்மானிக்கப்பட்டது.

விஞ்ஞான ஒளிமுன்.........!

பூபசர் ஜூலியன் எஸ். புக்சிலி லண்டன விட்டாரி கைடில் எழுதியிருப்பதாவது :—

கடவுள் ஒன்று இருப்பதாக என்னால் நம்பமுடியவில்லை. ஏனெனில் கடவுளை சிருஷ்டித்த கற்பனைகள் பயனற்றவைகளாகப் போய்விட்டன.

எதற்கும் கற்பனைகள் வேண்டியதுதான். அப்பொழுதுதான் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை விளக்கிக்காட்ட முடியும். ஆனால் இவ்விடத்தில் கற்பனை என்பது யூகித்து எழுதப்பட்டவைகள் என்று மட்டுமே கொள்ளவேண்டும், எதையும் யூகிக்காமல் செய்யமுடியாது. ஆனால் யூகிப்பதெல்லாம் சரியாகமுடிந்து விடும் என்று எண்ணுவதற்கில்லை.

உதாரணமாக உலகத்தின் சக்தி, தன்மை முதலியவைகளை ஒருவாறு யூகித்தால்தான் அதனதன் தன்மைக்கேற்ற வாறு அடக்கியாள முடியும்.

சில யூகங்களினால் உத்தேசங்களினால் இன்று உலகின்பல பாகத்திலுள்ள மக்கள் முன்னேறியிருக்கிறார்கள். சிலர் பழைய அநாகரிகவாழ்க்கையிலே இருந்து வருகிறார்கள். ஆனால், கடவுளை யூகித்தேசிக்கப்பட்ட உத்தேசமோ மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு எந்த வகையிலும் உதவாமல் பெரிய முட்டுக்கட்டையாகவேயிருந்து வருகிறது.

உலகிலே காணப்படுகிற சம்பவங்களுக்கு அவைகளின் காரணங்களை அறிந்து கொள்ள முடியாததினால் கடவுளையும், கடவுளைக் கர்த்தாவாகவும் சிருஷ்டித்தார்கள். எல்லா நிகழ்ச்சிகளுக்கும் கடவுளைப் பொறுப்பாளியாக்கினார்கள்; கடவுளுக்குச் சில குறைகளைக்கற்பித்தார்கள்.

அக்கடவுளுக்குப்பலியிடுவதாலும் வணக்கம் செலுத்துவதாலும் ஜபங்கள் செய்வதாலும் உலகில் தோன்றக்கூடிய துன்பங்கள், விபத்துகள் ஒழிந்துபோகும் என எண்ணினதால் இந்த உலகத்திலே என்றும் பலதிறப்பட்ட கடவுள் கற்பனைகள் இருந்து வந்திருக்கின்றன. சிலர் மிருகத்தன்மையையும் கடவுளுக்குக்கற்பித்தார்கள். சிலர் ஏகேசுவரவாதத்தை ஸ்தாபித்தார்கள். அந்த ஏகேசுவரவாதம் ஒரு கூட்டத்தினருக்குச் சொந்தமாகக்கருதப்பட்டு வந்தது.

மகமதியர்கள் ஒரே ஒரு கடவுள் இருக்கிறார் என்று யூகித்தார்கள். கிறிஸ்தவர்கள் கிருத்துவத்தைக்கற்பித்தார்கள். கடவுளைச் சம்பந்தப்படுத்தாத மதமாக யூகிக்கப்பட்டமதம் புத்தமதமாகும். ஆனால் நாளடைவில் இம்மதமும் பிறமதவாசனையிலாழ்ந்து அந்தநோக்கத்தைப்புகுத்தி விட்டது.

ஒருவேளை சிலருக்கு பிறரை அறியாமையில் ஆழ்த்தி ஏமாற்றித்தாங்கள் சுகமாகச் சுகபோகமாக வாழ இக்கற்பனை உதவி செய்திருக்கக்கூடும். ஆனால்பொதுவாக மக்களுக்கு உண்மையிலே உய்ய வழி அளித்திருக்கிறதா என்று ஆராய்வோமேயானால் அந்தக் கலம்தான் சூன்யமாகக்காணப்படும்.

என்னைப் பொறுத்தமட்டில் இக்கடவுள் கற்பனை இன்று மக்களை மாக்களாக்குவதைத் தவிர வேறொன்றையும் நாம் அதனிடம் காணமுடியாது என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

என்றால், விஞ்ஞானிகளால் யூகிக்கப்பட்ட கண்டுபிடிக்கப்பட்ட கூற்றுகளைத் தவிர மற்றெதையும் நம்பமுடியவில்லை. விஞ்ஞான ஒளிக்குமுன் அஞ்ஞானமாகிய இருள் நிற்கமுடியாது. கடவுள் கற்பனைக்கும், கடவுள் ஜெபதபங்களைக்கேட்கிறார், அனுக்கிரகம் செய்கிறார் என்ற பித்தலாட்டங்களுக்கும் விஞ்ஞான உலகம் இடங்கொடுக்கிறதில்லை எல்லாப் புரட்சிகளையும் பொசுக்கிவிடுகின்றது.

ஆஸ்திக்வாதங்கள் எனது செவிகளில் நாராசம்விட்டுத்துளைப்பதுபோலிருக்கின்றன.

ஏதோ இவ்வுலகைச் சிருஷ்டித்தார் என்றோ அல்லது மனிதத்தன்மைஇருக்கிறதென்றோ கற்பனை செய்து மனித வாழ்க்கைக்கும் அக்கடவுளுக்கும் ஒருவித சம்பந்தமும் வைக்காமல் வைத்துப்போயிருந்தால் அக்கடவுளைப்பற்றி நான்மட்டுமல்ல எவருமே கவலைப்படமாட்டார்கள். ஒரு கடவுள் அல்லக் கோடிக்கணக்கான கடவுளிருந்தாலும் சரியே.

சாகாத்தன்மையிலும் எனக்கு நம்பிக்கையில்லை. மதம் இன்று உலகிலே உழன்றுகொண்டுவருவதற்கு காரணம் திருப்தியேயாகும். மனிதன் இறந்தால் பின்னர் உடனே உயிர்த்தெழுதலோ புனர் ஜன்மம்எடுத்தலோ என்ற கற்பனை யூகிப்புஇருப்பதாகவே அநேகர் அதைக்கட்டி அழுகிறார்கள்.

யார்தான் சாகவிரும்புவார்கள்? 1120 வயது சென்ற கிழடுதட்டியபிறகுங்கூட இன்னும் கொஞ்சக்காலம் உயிர்வாழப் பிரியப்படும்போது என்றும் உயிரோடேயிருப்போம் என்று யார்தான் விரும்பாதவர்கள்?

பொதுவாக மக்கள் சாகாமலிருக்க விரும்புவதால், அவர்களுடைய எண்ணத்திற்குஏற்ற உத்தேசங்கள் மதங்களிலே காணப்படுவதால் மதத்தை இன்றும் தழுவிவருகிறார்கள். நம்மவர்களில் எத்தனைபேர் இறந்துபோன சிநேகிதர்களை மீண்டும் உயிருடன்காணப் பிரியப்படமாட்டார்கள்?

மறைந்தவர்கள் உயிர் வாழ்கிறார்கள் என்ற கற்பனையை நிலைநாட்ட மறுஉலகத்தைச் சிருஷ்டித்தார்கள்; நரகத்தையும் தோற்றுவித்தார்கள், இவைகள் விஞ்ஞானச்சுடரில்மறைந்து தேய்ந்துவிட்டன.

நாம் இறந்தபின் எத்தன்மையான உருவத்தையும் உயிரையும் சக்தியையும் பெறுகிறோம் என்பதற்கு விஞ்ஞானத்தால் பதில்சாற்றமுடியவில்லை.

கடவுள் கற்பனையென்றும் சாகாத்தன்மை மாயை என்றும் சொல்லிவிட்டால், முடிவுசெய்து விட்டால் மதத்தில் எஞ்சி நிற்பது என்ன?

கடவுள் நம்பிக்கையிலும் சாகாத்தன்மையிலும் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லையானால் மனித சமூகத்தினிடம் காணப்படுகிற ஒழுக்கம் மறைந்துபோய் விடும்; அழிந்துவிடும் என்று பகுத்தறிவாதிகளை, நாஸ்திகர்களை ஆஸ்திக சிகாமணிகள் பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

முதலாவது இவைகளிடம் நம்பிக்கை வைக்காத சம்சய வாதிகளும் நாஸ்திகர்களும் பகுத்தறிவு வாதிகளும் எந்தவகையில் ஆஸ்திகர்களைவிட இளைத்தவர்களாகக் காணப்படுகிறார்கள்என்பதைக் கவனிக்கவேண்டும்.

இரண்டாவது கடவுள் நம்பிக்கை இல்லாமலும்மறுஜன்மம், மறித்துயிர்த்தெழுதல் முதலியவைகளில் நம்பிக்கையில்லாமலும் வளர்க்கப்பட்டவர்கள் இன்று வீரர்களாகவும் சுகசரீரிகளாகவும்இருந்து வருவதை நாம் பார்க்கிறோம்.

கடவுள் நம்பிக்கை மனிதனை சுயநலத்தையே கருதச் செய்கிறது. தான்ஈடேறுவதையே லட்சியமாக்குகிறது. மற்றவர்களை வெறுத்துத் தனித்துவாழக்கற்பிக்கிறது. ஏனெனில் அப்பொழுதுதான் மறு உலகத்தில் சந்தோஷ வாழ்க்கை வாழ முடியுமென்ற ஆசையை உண்டு பண்ணுகிறது. அவனைநம்பிவந்தபெண்டு பிள்ளைகளைக்கூடக்கைவிடச் செய்கிறது. இவ்வுலகத்தில் தன் சகோதரர்கள் படும் துயரங்கள் அவனது கண்ணுக்குப்புலனாகாதவாறு செய்துவிடுகிறது.

இது ஒன்றே, ஆஸ்திகனா, நாஸ்திகனா, யார் உலக க்ஷேமத்திற்காகப் படுகிறவனென்பதை விளக்காமற்போகாது.

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு.

காஞ்சி 11—2—45 ஞாயிறு

தற்காலீக சாந்தியே!

—:(o):—

நாம் திராவிடர்; நம்முடைய நாகரிகம் திராவிட நாகரிகம்; நம்முடைய பழக்க வழக்கங்கள் திராவிட நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டவை; உண்ணல் உடுத்தல் கொள்ளல் கொடுத்தல் ஆகிய எல்லாவற்றிலுமே நாம் நம்முடைய இன மரபுரிமையைப் பாதுகாத்து வந்திருக்கிறோம்; நம்முடைய மொழிகலை ஆகிய இரண்டும், நம்மால் போற்றப்பட்டுவந்த சிறந்த முறையால், பிறநாட்டுப்பிறமொழிகளைப் பேசும் பிற நாகரிகங்களையுடைய மக்களாலும் வரவேற்கப்பட்டதோடன்றி, அவை, அவர்களுடைய பழக்க-வழக்க-நாகரிகங்களுள்ளும்புகுந்து, அவர்களது வாழ்க்கைத்துறைகளைச் சிறப்பித்தன வென்ற செய்திகள் பலவற்றை வரலாற்று நூல்கள் நம் கண்முன்னே தோன்றிக் கழிபேருவகை அடையச்செய்தன.

இந்த நிலையில், 'திராவிடம், திராவிடர், திராவிடநாகரிகம், திராவிடக் கலை, அதையொட்டிய பழக்கவழக்கங்கள் ஆகிய ஒன்றும் இப்போது கிடையாது; எல்லாம் ஒன்றாய்க் கலந்துவிட்டன, திராவிடம் வேறு ஆரியம் வேறு என்று சொல்லப்பட்ட காலம் மலையேறிவிட்டது; இப்போது ஆரியமும் திராவிடமும் பிரிக்கமுடியாதபடி ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டுவிட்டது' என்று ஒரு சிலர் கூறியதும் எங்கள் செவிகளுக்கு எட்டியது.

எவருடையவும், எதனுடையவும் கலப்பின்றித் தனித்து வாழ்ந்து நம்முடைய மரபுரிமையைப் பாதுகாத்து வந்த நாம், 'ஆரியத்தோடு பிணைக்கப்பட்டுப் பிரிக்கமுடியாதபடி ஆய்விட்டோம்' என்று ஒருவர் இருவரோ அல்லது சிலரோ கூறும்படியான நிலைமைக்கு, ஏன் ஆளானோம் என்பதை நம் தலைவர்களிற் பலர் ஆராயத்தொடங்கினர்.

நம்மவருட் பெரும்பகுதியினர், தங்களை இந்துக்கள் என்று நினைக்கும்படியும், இந்துமதத்தைத் தங்களதாக ஏற்றுக் கொள்ளும்படியும், இந்துமத ஆசாரங்களைத் தங்கள் பழக்க வழக்கங்களிற் கொண்டு வந்து கையாளும்படியும் செய்த ஆரியர்களுடைய சூழ்ச்சிகளை அறிந்துகொள்ள முடியாமற்போன நிலையிலேயே, அவர்கள் (திராவிடர்களிற் பெரும்பகுதியினர்) தங்களை இந்துக்கள் என்று ஒப்புக்கொண்டு அல்லற்படுகின்றனர் என்பதையும், அதனாலேயே, சிலர், ஆரியமும் திராவிடமும் ஒன்றாய்க்கலந்து விட்டதென்றும் கூறும்படி நேர்ந்ததென்பதையும் கண்டார்கள்.

அதன்பயனாகக் கடந்தபதினைந்து ஆண்டுகட்கு மேலாகவே நமது தலைவர்களும் இயக்கத் தோழர்களும் ஆற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளும், எழுதிய ஆணித்திறமான எழுத்துக்களும், நம்மவரிற் பெரும்பாலாரை, 'நாம் இந்துக்களுமல்ல, ஆரியர்களோடு கலப்புற்றவர்களுமல்ல, நாம் தனித்திராவிடரே' என்று எண்ணும்படி செய்ததோடு, செயலிலும் தாங்கள் திராவிடர்களே என்பதைக் காட்டிக் கொள்ளும் முறையில் தங்கள் வாழ்க்கையில் பல மாறுதல்களை நடத்தியும் காட்டினர் - காட்டிவருகின்றனர். திருவாரூரில் நடைபெற்ற மாகாண மாநாட்டில்கூடிய பலவாயிரக்கணக்கான திராவிடப்பெருங்குடி மக்கள், "நாங்கள் திராவிடர்களேயன்றி, இந்துக்கள் அல்ல' என்ற தீர்மானத்தையும் ஒரே மனதாக நிறைவேற்றிவைத்தனர். இத்தீர்மானத்தை எப்படியாவது நிறைவேற்றி நடைமுறையில் கொண்டு வருவதற்காக நமது ஒப்பற்ற தலைவர் பெரியார் அவர்கள் எடுத்துக் கொண்ட பெருமுயற்சிக்கும் உழைப்புக்கும் திராவிட மக்கள் என்றைக்கும் கடமைப்பட்டவர்கள் என்று கூறுவதுமிகையாகாது.

இத்தீர்மானத்தின்விளைவும்இதனையொட்டி நமதியக்கத் தோழர்கள் செய்த பிரசாரத்தின் பலமுமே மறைந்துகிடந்த மாணவ உலகுக்கு மறுமலர்ச்சியும் — புத்துணர்ச்சியும் அளித்துப், புதுமையாம் புத்துலகை அமைக்கும் அற்புதச்சிற்பிகளுமாக்கியது என்பதை எவரே மறுக்க முடியும்! இன்றைய மாணவஉலகம் மலைபோல் நிமிர்ந்து நிற்கிறது! மார்பைத் தட்டுகிறது! மறந்தும் தலை வணங்கோம் மாற்றாருக்கு என்று கூறுகிறது! தலைபோயினும் தரணியை நாம் அடைந்தே தீருவோம் என்று தாக்கீது விடுகிறது! ஆரியத்தை ஆயிரம்கல் தொலைவுக்கு அப்பால்ஓட்டுவோம் என்று அஞ்சா மொழி பேசுகிறது! இந்துமதத்தின் இடுப்பை ஒடித்துவிட்டோம் என்று இறும்பூதெய்துகின்றது! மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கும் வரை தரையிற் படுப்பதில்லை என்று தரணி சுற்றிவருகிறது! தாயைப் பிரிந்த சேய் தடுமாறிநிற்பதுபோல், திராவிடத்தைப் பறிகொடுத்து நிற்கும் நிலையிலுள்ளவர்களை நோக்கிப், பக்கத்துணையாக மட்டும் நீங்கள் இருங்கள், நாங்கள் திக்கெட்டும் திராவிட முரசொலி கேட்கும்படி செய்துவிடுகிறோம்என்றுகேண்மையூட்டுகிறது! இதனை வெற்றியின் அறிகுறியென்றேவீணரும் வேற்றாரும் உணர்ந்து தங்கள் தவறுகளைத் திருத்திக்கொண்டாலன்றித், திருத்தியமைக்கும் திராவிட நாட்டின் தெருக்கோடியிலும் அவர்கள் தலைகாட்டமுடியாதென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

எனவேதான், இந்துசட்டத்தில் சீர்திருத்தம்செய்யப்புறப்பட்டிருக்கும் ராவ்கமிட்டியார், தற்காலிகத் திருத்தமாகத் திராவிடத் தலைவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் சில திருத்தங்களையும் தங்கள் திருத்தங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அத் திருத்தக் கமிட்டியின் உறுப்பினர்களாகக் குறைந்தது மூன்று திராவிடர்களாவது சென்னை மாகாணச் சார்பில் இருக்கவேண்டுமென்றும் விரும்புகிறோம்.

திராவிட நாடு தனியாகப்பிரிக்கப்பட்டு அதன் ஆட்சிமுறை அமைக்கப்படும்போது, திராவிடப் பெருங்குடி மக்களுக்கு உகந்த முறையில் ஒரு சமுகஅமைப்புமுறைச்சட்டம் வகுக்கப்படுமே யன்றி, இப்போதிருக்கும் இந்து சட்டத்தையோ அல்லது திருத்தியமைக்கப் படும் இந்துசட்டத்தையோ அது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. ஆகவேதான், இத்திருத்தங்களைத் 'தற்காலீக திருத்தம்' என்று நாம் குறிப்பிட்டோம்.

'இந்து' என்று தன்னைச் சொல்லிக்கொள்ள விரும்பாத ஒருவன், இந்துசட்டத்தையோ அதன் திருத்தத்தையோ ஒருபோதும்வரவேற்க மாட்டான். ஆனால், இன்னும் சில திராவிடர்களுக்குத், தாங்களும் இந்

(7ம் பக்கம் பார்க்க)

தற்காலீக சாந்தியே!

6-ம் பக்கத் தொடர்ச்சி.

துக்களே என்று எண்ணிக்கொண்டிருக்கும்மயக்கம், தெளியாததால், அம்மயக்கம் தெளியும் வரையில் அல்லது தெளியவைக்கும் வரையிலாவது இச்சட்டத்தைச் சில திருத்தங்களோடாவது இருக்கவிடுவதைவிடக், கால நிலை வேறு வகையில் இதற்கு மாற்றம் காண இடம் அளிக்கவில்லை. இந்தி எதிர்ப்பு, ஓட்டலில் பேதம் ஆகியவற்றில் வெற்றி கண்ட திராவிடர்கட்கு இது ஒரு பெரிய காரியமன்று; என்றாலும், 'எண்ணித் துணிக' என்பதை எண்ணி இன்னும்கொஞ்சக் காலத்திற்கு இதுபோன்ற காரியங்கட்கு வாய்தாப் போடவேண்டியிருக்கிறது.

முக்கிய அறிவிப்பு.

ஏஜண்டுத் தோழர்கட்கும் சந்தாதாரர்கட்கும்

ஏஜண்டுத்தோழர்களிற்சிலர், எத்தனை கடிதங்கள் எழுதினாலும் பதில் எழுதுவதும் இல்லை; பாக்கியை அனுப்பவேண்டுமென்று எண்ணுவதுமில்லை. இயக்க வளர்ச்சி ஒன்றைமட்டுமே குறிக்கோளாகக்கொண்டு நடத்தப்பட்டு வரும் ஒரு பத்திரிகைக்குப் பணமுடையை உண்டாக்குவதுமுறையாகாது. இதனைஏஜண்டுத் தோழர்கள் கவனித்துத் தங்கள் பாக்கியை உடனுக்குடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதுபோலவே, சந்தாதார்களில் பெரும்பாலார், ஒருமுறை ஏதோகொஞ்சம் பணம் அனுப்பிவிட்டால் காலமுழுவதும் பத்திரிகை வந்துகொண்டே இருக்கும் என்ற முறையைப் பின்பற்றிருப்பதாக நினைக்கும் முறையில் நடந்துகொள்கிறார்கள். இந்த முறையைத் தவறு என்று சொல்லாவிட்டாலும், இங்கு, பேப்பர் வாங்குவதிலும் ஆபீஸ் நிர்வாகத்திலும் ஏற்படுகின்ற பண நெருக்கடியைக்காணும்போது, நமது தோழர்கள் வாளாஇருப்பதுமுறையாகாதென்றேதோன்றுகிறது. ஆகையால், சந்தாப்பாக்கி வைத்திருக்கும் தோழர்கள் தங்கள் பாக்கியை அன்புகூர்ந்து உடனே அனுப்பி உதவுவதோடு, பாக்கி அனுப்பும்போது தங்கள் தங்கள் சந்தா நம்பரையும் மணிஆர்டர் கூப்பனில் தவறாது குறித்தனுப்பும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

மானேஜர்,

திராவிடநாடு.

யாகத்தால் யாருக்குப் பலன்?

(G. சீனு)

1938ம் ஆண்டில் இப்பெரும்போர் ஆரம்பமாகி இன்னும் முடிந்தபாடில்லை. இது எப்போதுமுடியும் முடியுமென எதிர்பாராதமக்களில்லை. ஏனெனில்மேல் நாட்டார் தத்தம்தேயத்தின் எல்லைக் கோட்டிற்காகப்பெருவாரியான மக்களை எதிரிகளின் வெடிகுண்டுகளுக்குப் பலிகொடுத்தும் அவைகளால் படுகாயமடைந்தும் போர்புரிந்துவருகிறார்கள். இருந்தால்வெற்றி, இறந்தால் வீரம் என்ற பரந்தநோக்கத்துடனேபாடுபடுகிறார்கள். அதன்பயனாய் இந்தியாவெங்கும் பஞ்சம் பரவிநின்று, பலபேர் பசியினால் பலி வாங்கப்பட்டும் பட்டினியால் பாதவித்தும்வருகிறார்கள். இந்தநிலையில்,

"நாடு எக்கேடுகெட்டாலும் நம் வாழ்க்கைஎன்றும்நலமுடன்நடக்கவேண்டும்" என்றுநினைக்கும், என்அதேபோல் நடக்கும் பார்ப்பனர்களுக்கே இந்தக் காலம் பலவிதத்திலும் பயன்தருகிறது. உதாரணமாக உலக சமாதானத்தைக் கோரி இப்போது ஐதராபாத் (நைஜாம்) தனியரசில் "மகாயக்ஞம்" என்றபேரால் நடந்துவரும் அர்த்தமற்ற, அவசியமற்ற, அறிவற்றகாரியமேபோதுமானது. இந்தியாவில் மற்ற இந்துத் தனியரசுகளுள் இவ்வேள்வி நடந்திருந்தால் நாம்அதைப் பற்றி ஆச்சரியப்படப்போவதில்லை. ஆனால் இந்துமத மல்லாத இஸ்லாம்மதத்தைச்சார்ந்த ஐதராபாத் தனியரசிலே இவ்வேள்வி நடைபெறுகிறதென்றால் இந்தியர்களைப்பிடித்திருந்தஆரியப்பீடை இஸ்லாமியரையும்பிடித்துவிட்டது என்றேகருதவேண்டியிருக்கிறது. எனவே உண்மையாளனுக்கும்உழைப்பாளிகளுக்கும்இதுகாலமல்ல. பொய்யர், புரட்டர், வஞ்சகர், வலியர் இவர்களுக்கே இது காலம்; கொலை, களவு, வஞ்சம், இலஞ்சம், சூது, வாது இவைகளே இக்காலத்திற்கேற்ற தொழில்கள் போலும்.

நிற்க, இப்பொழுது நடைபெற்றுவரும் வேள்வியினால் ஏதாவது பயனுண்டாவென்பதேநமது கேள்வி. முற்காலத்தில் ஆரியர்கள் கடவுள்பேராலும், மதத்தின் பேராலும் வேதத்தில்சொல்லப்பட்டிருக்கிற அஜமேதயாகம், அஸ்வமேதயாகம் என்று சொல்லி ஆடு குதிரை முதலிய பிராணிகளைச் சித்திரவதைசெய்து அவைகளின் ஒவ்வொருஉறுப்பும் ஒவ்வொரு தேவனுக்கு உரித்தானதென்று சொல்லி எல்லாவற்றையும் தாங்களே புசித்து வந்தனர், புசித்து வருகின்றனர் என்றால் அவர்களின்மாமிச மோகந்தானென்னே!

ஆரியர்கள், அவர்கள் பிழைப்புக்காக வேண்டி இஷ்டம்போல் இயற்றியுள்ள வேதாகமபுராண இதிகாசங்களில் இன்னும்பௌண்டரீகயாகம்போன்ற ஆபாச, அநாகரிக மிலேச்சச் செயல்கள் மிகுந்த யாகங்கள் பலவாம்.

ஆனால் இப்பொழுது நடைபெறும் இவ்யாகம் எத்தன்மைத்தென்பதை யாமறியோமாயினும் யாகம் யாரால்? எதற்கு? அதன் விளைவு என்னவென்பதே நாண்டுகவனிக்கவேண்டிய விஷயம். உலக யுத்தம் முடியவும், சமாதானம் ஏற்படவுமே இவ்யாகம் செய்யப்படுகிறதாம். யாகத்தினால் யுத்தம் முடியுமா? யாகத்திற்கும் யுத்தத்திற்கும் என்ன சம்பந்தம்? இதுவரை யார் யார் யாகங்கள் செய்து என்னதப் பலனையனுபவித்தார்கள்? வெள்ளையர் ஏராளமான பணத்தை வீணில் ஏனோ செலவழிக்கிறார்கள்? ஏரி, குளம், ஆறுகளில் அணைகள் கட்டி, வாய்க்கால்கள் வெட்டி ஏன்நீர்ப்பாய்ச்சவேண்டும்? பார்ப்பனர்களிடம்கொஞ்சம்பணத்தைக்கொடுத்து வருண செபஞ்செய்யச் சொல்லிச் சகஸ்திர அர்ச்சனை செய்து வைத்தால் பாதம் 3 மழை, இல்லைஇல்லை வேண்டும்போது மழை பெய்விக்கலாமே! இந்த யுத்தத்திற்கு இவ்வளவுசேமிப்புகள், பணம், படை, ஆயுதம், விமானம், யந்திரங்கள் எதற்கு? பார்ப்பனர்களைக் கொண்டு யக்ஞ யாகாதிகள் செய்வித்து மந்திரங்களை யுச்சரித்தால் எதிரிகள் யாவரும் எளிதில் நசித்து விடமாட்டார்களா? பூகம்பம் எரிமலைவாந்திபேதிவைசூரி பிளேக்குக்கும் ஏன்பயப்படவேண்டும்? நவக்கிரகச்சாந்தி செய்யச்சொல்லி நாட்டில் வரவொட்டாமல் தடுத்துவிடலாமே. அந்நிய அரசாங்கத்தார் ஆரியர்களின் அற்புத சக்தியை அறியார்கள் என்றே ஐதராபாத்அரசர், யுத்தம்முடியும் தருவாயிலிருக்கிறதென்று பலரும் கருதக்கூடிய இந்நாளில் சமாதானத்திற்காகச் சர்மாக்களையும், சாஸ்திரிகளையும் கொண்டு யாகம் செய்விக்கிறார், என்னே அவரின் பண்பு!

யாகம் நடத்துகிற பார்ப்பனரோ, அல்லது பாப்பனர் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் எவருமோ பார்ப்பனருக்குரிய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து நடக்கின்றனரா என்று கேட்டால், 'அது தான் கிடையாது சார், ஏதோகாலத்துக்கேற்றபடி கோலத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றுசொல்வாளேபெரியவா! அதுபோல காரியம் நடக்கிறது' என்று பல்டியடிக்கும் இப்பார்ப்பனர்களில் 3000 பேர்களால் செய்யப்படும் யாகத்தால் பலனுக்குப்பதில் புல

(8ம் பக்கம் பார்க்க)

விஞ்ஞான ஒளிமுன்

5ம் பக்கத் தொடர்ச்சி;

ஒவ்வொருவனிடத்திலும் அவர்விளங்குகிறுர்; ஒவ்வொருவனுடைய இருதயத்திலும் அவர் பிரகாசிக்கிறுர் என்று சொல்லாத மத கிரந்தங்கள் இல்லே.

ஆனல் மக்களிடத்திலேஇன்றுதோன்றியிருக்கிற துன்பங்களுக்குக்காரணஸ்தர்கள் நாஸ்திகர்கள் என்று யார்தான் சொல்லமுடியும்?

மனிதனுக்கு நன்மை, தீமை, அறிவு, அறியாமை; அழகு, அவலட்சணம்;மேன்மை, வன்மை, சுயநலம், பிறநலம் முதலியவைகளைக் குறித்து அறியக்கூடியசக்தி இருக்கிறது. தான் செய்கிற காரியங்களின் தன்மைகளைச் சீர் தூக்கிப்பார்க்கும் சக்திமனிதனுக்குஇருக்கிறது. பலாபலன்களை நிதானிக்கும் வன்மை இருக்கிறது

சாதாரணமாக மனிதனிடத்தில் நல்ல குணங்களே முதலில்காணப்படும். அவைகள் மாறுபட்டுக்காணப்படுவதற்குவாழ்க்கையின் அமைப்பே காரணமாகும்.

மனிதன் தன்னுடைய அநுபவத்தில் எது நன்மை பயக்கிறதோ எது நல்ல பலனைத். தருகிறதோ அதனைத்தான் செய்யப்பிரியப்படுகிறுன். ஆகவே ஒவ்வொரு நாளும் அனுபவத்திஞல்தான் மனிதன் வளர்ச்சியடைகிறுன் என்பது நன்கு புலனுகும்.

எச்சரிக்கை.

தூத்துக்குடி கீழஷண்முகபுரம் பிராப்பர்தெருவிலிருக்கும் சுடலையாடும் பெருமாள்நாடார்மனைவி பச்சைமால் நாடாத்திக்காகதெரிவிக்கும்எச்சரிக்கைநோடீஸ் என்னவென்றுல், என் கக்ஷிக்காரியின் மகன் காசிநாடார் என்பவனைஎமாற்றித் துர்ப்பழக்கத்திற்காகவும், அனுவசியச் செலவுகளுக்காகவும், சொற்பத்தொகைகள்கொடுத்தும், தொகைகள்கொடுக்காமலும், அவனிடம் சி ல ர் அநேகபுரோநோட்டுகள் தஸ்தாவேசுகள் எழுதி வாங்கியும், நகை, துணி, வெங்கலபாத்திரங்கள் முதலியசாமான்களைவாங்கியும் வருவதாகவும்; அப்படி ஷை யானிடம் வாங்கும் புரோநோட்டுகள் தஸ்தாவேசுகள் நம் கக்ஷிக்காரியையாவது அவளுடையசொத்துக்களையாவது கட்டுப்படுத்தாதுஎன்றும்: ஷை காசி நடாருக்கு யாதொருசொத்தும் இல்லாததால் அவனிடம்ஒருவரும்புரோநோட்டுகள், தஸ்தாவேசுகள் எழுதிவாங்கக்கூடாதென்றும், நகை வெங்கலப்பாத்திரம்துணி முதலிய சாமான்கள்வாங்கக்கூடாதென்றும்; அவ்விதம்செய்கிறவர்கள், அவர்கள் செய்கையால் எற்படும் சகல நஷ்டங்களுக்கும் ஜவாப்தாரியாவார்கள் என்றும், இதன் மூலம் எக்சரிக்கைசெய்யப்படுகிறது.

தூத்துக்குடி 7-2-45.

V. N. கந்தய்யா,
B. A; B. L;
அட்வகேட்.

ஐஸனேவரில் தந்திரம் பலித்தது

(லேப். ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக் எழுதுவது)

ருன்ஸ்டெட் டாங்கி டிவிஷன்களைச் சேர்த்துவைத்திருந்ததை நமது விமானிகளும் வேவுகாரர்களும் கவனிக்கவில்லையென்பது உண்மையன்று. மொத்த ஜெர்மன் பலத்தில் மூன்றில் ஒரு பங்கு கொலோருக்கு மேற்கிலும் தென்மேற்கிலும் திரட்டப்பட்டிருந்த விஷயம் எதிர்த்தாக்குதல் ஆரம்பிப்பதற்கு முன்னமே ஒவ்வொரு தலைமை நிலையத்துக்கும் தெரிந்துதான் இருந்தது. இந்தமூலபலம் எப்படிப் பிரயோகிக்கப்படுமென்பதுதான் தெரியாது.

ருன்ஸ்டெட் தமது எதிரிகளைத் திகைக்க வைத்துவிட்டாரென்றே வைத்துக்கொள்வோம். ஆனல் அவருடைய தாக்குதலைச் சமாளித்த விதத்துக்கும் நாம் மதிப்ப கொடுத்தாகவேண்டும். தற்காலயுத்தத்தில், திடீரென்று தாக்குபவர் ஆரம்பத்தில் வெதூரம் பாய்வது சாத்யம். ஆயினும், எண்ணெய் சப்ளை சரியாய் இருக்கும்படி பார்த்துக்கொண்டாலொழியச் சீக்கிரத்திலே முன்னேற்றம் நிற்கவேண்டியதுதான். தற்சமயம்ருன்ஸ்டெட்டின் எண்ணெய் நிலைமை எப்படியிருக்கிறதென்று தெரியாது. ஆனல் எண்ணெய் சேகரிப்பதற்காக, தாக்குதல்ஆரம்பிப்பதற்குமுன்பு பல வாரங்கள் கவசப்படைகளையும்விமானங்களையும் அவர்பேசாமல் வைத்திருக்கவேண்டியதாயிற்று.

ருன்ஸ்டெட்டின் முதல் பாய்ச்சலைத் தடுத்து நிறுத்துவதற்கு விமானபலமும் ஜெனரல் பாட்டனின் மூன்ருவது அமெரிக்கச் சைன்யமுந்தான் பெரிதும் உதவியாயிருந்திருக்கின்றன.விமானபலம் காலநிலையைப்பொறுத்ததாய்இருக்கிறது.

நல்லவேளையாய் நாலுநாள்நமக்குஅனுகூலமாயிருந்தது. அந்தச் சமயத்தில் நேச விமானங்கள் ஜெர்மன் கவசப்படைகளை நன்ருகப்பலிவாங்கியிருக்கின்றன ஆனல் தற்சமயம் காலநிலை அவ்வளவு அனுகூலமாய் இராதபடியால் விமானத்தாக்குதல் ஒன்றைமட்டும் ஜெனரல் ஐஸெனேவர் நம்பியிருக்கமுடியாது. இதற்குப்பதிலாக நிலப்படை எதையேனும் அவர் பிரயோகிக்கவேண்டியிருந்தது. பெரியதாக்குதல் ஒன்றுக்குச் செய்யும் ஏற்பாட்டுக்கு நடுவில் அவர் இப்படிச் செய்யவேண்டியதாய்விட்டது. பின்னணியில் உடனே புறப்படக்கூடிய மூலப்படை ஒன்றும் இல்லே.ஆகவே,அந்தச்சமயத்துக்கு.ஜெனரல் பாட்டனின் மூன்ருவது அமெரிக்கச் சைன்யத்தை வடக்கேபாய்ந்தருன்ஸ்டெட்டின் தென்பகுதியைத் தாக்கும்படி அவர் எவினர்.

இப்படிச் சமயத்துக் கேற்றுப்போல் உள்ளத்தைக்கொண்டு நடத்திய அவர் தாக்குதல் இதுவரை மிகவும் வெற்றிகரமாகவே இருந்திருக்கிறது. ஆனல் இதஞல் ஸார்முனை ஊனமடைந்துவிட்டது, இதிலிருந்து வேறு ஏதேனும் சிறந்த உபாயத்தைப்பிரதம தளபதி அனுசரித்திருக்கக்கூடுமென்று நான் கூறுவதாகக் கொள்ளக்கூடாது.

ருன்ஸ்டெட்டின் திட்டங்கள் எண்ணெய் நிலைமையைப் பெரிதும் பொறுத்திருக்கின்றனவாயினும் அநேகமாய்அவர் மீண்டும் தாக்கக்கூடும். ஆர்டென்னிலில் பின்னும்மேற்கே பிரவேசிக்கமுயல்வாரென்று தோன்றவில்லே. திகைப்பு தீர்ந்துவிட்டபடியால் ஆரம்ப வெற்றியைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய படைப்பலம் ஜெர்மானியருக்கு இல்லே. ருன்ஸ்டெட்டின் தாக்குதல் பலித்ததா இல்லையா என்பதை சரித்திரம்தான் தீர்மானிக்கவேண்டும்.

(o)

யாகத்தால் 7ம் பக்கத் தொடர்ச்சி.

கேடுகளே விளையுமென்பது நாம் கூருமலே விளங்கும் என்? மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி, படுக்கப்பாயுமின்றி, காற்றிலும், மழையிலும், பனியிலும், வெயிலிலும், உடல்கருக உளம்உருக உழைத்தும்போதிய ஊதியம்பெருமல்பசியாலும், பட்டினியாலும், மனைவிமக்களுடன் எலும்புந் தோலுமாய் ஏங்கி நிற்பதையறிந்தும் ஓமகுண்டத்தில் ஓம்நமசிவாயா வென்று நெய்யை யூற்றி, நவதான்யங்களைப் போட்டுப் பொசுக்குவதில் என்னபலனே?

தந்தி:—"புறமார்க்" திருச்சி.

பண்டிதரே!

[தி. ஜ. ர.]

பண்டிதரே—பழைய பண்டிதர் புதிய பண்டிதர் இரண்டு பெயருக்கும்தான் இந்த அழைப்பு. தமிழைப்பற்றித் தாங்கள் ரொம்பக்கவலைப்படுகிறீர்கள். தமிழினிடம் தங்களுக்குப் பூர்ணமான அன்புஉண்டு. ஆனால், தாலிகட்டியகணவன்மாதிரிபாத்தியம் கொண்டாட வேண்டாமென்றால், கேட்கமாட்டேனென்கிறீர்களே; அதுதான் பலருக்குத் தங்களிடம் எரிச்சலை உண்டாக்குகிறது.

தமிழ்யாருக்கும் ஏகபோக உரிமைப் பண்டமல்ல. அது தமிழர் யாவருடையவும் பொது உடைமை என்பதைத் தாங்கள் நினைவில்வைக்கவேண்டும். தாயின் வயிற்றில் பிறந்ததுமுதல் தமிழிலேபேசி, தமிழிலே நினைத்து வளர்ந்த அத்தனை பேருக்கும் தமிழ் சொந்தம். தங்கள் வீட்டுப் புத்தக அலமாரிக்குள்ளேதான் இருக்கிறது தமிழ் என்று தாங்கள் நினைத்தால், அதுதவறு. அங்காடிக்காரத் தங்கத்துக்குத் தமிழில் பாத்தியமில்லையென்றால், அவள்பச்சையிலைகாய்கொத்தமல்லிவிற்க முடியாது. தமிழுக்கு அந்தப்புரவாழ்க்கை கிடையாது. வீதியெல்லாம்தமிழ், வீடெல்லாம் தமிழ்.

தங்கள் தமிழ் நூல்கள்தான் என்னவென்று நினைத்திருக்கிறீர்கள்? எங்கோ காட்டில்பிடித்து வந்தசிங்கம், புலி, கரடி என்றுநினைத்திருக்கிறீர்களா? கூண்டை விட்டு வெளியேவிடக்கூடாது என்று அஞ்சாதீர்கள். நீங்கள் சர்க்கஸ் வேடிக்கை செய்வதற்காகத்தான் தமிழ் என்ற வஸ்துப் படைக்கப்பட்டிருக்கிறதென்பது தவறான மனோபாவம். தமிழ் உங்களைக்கேட்டுக்கொண்டு ஜனிக்கவில்லை; உங்களைக்கேட்டுக்கொண்டு வாழப்போவதில்லை. தமிழில் மற்றவர்களைப்போல உங்களுக்கும் பாத்தியமுண்டு. அவ்வளவுதானேயொழிய, ஏகபோக உரிமைகொண்டாடவேண்டாம்.

கம்பன் சொல்லியிருக்கிறான், சேக்கிழார்சொல்லுகிறார் என்று சதாசர்வதாத் தியானம்செய்துகொண்டிருக்கிறீர்களே, கம்பனும்சேக்கிழாரும் பெரியவர்களாயிருக்கலாம். அதற்கென்ன? தங்கமயமான பவுன்பெரிய நாணயம்தான். செப்புக்காசுகளை அதற்காகச் சமுத்திரத்தில்கொண்டுபோய்க் கொட்டிவிட முடியாது. பெரிய மனிதர்கள் பச்சை நோட்டுகளாகவும், ஆயிரரூபாய் உண்டியல்களாகவும் செலாவணிசெய்து கொண்டிருக்கலாம். எல்லாராலும் அப்படிமுடியுமா? தம்படி, காலணா, அரையணாக்களை வரவுசெலவுசெய்துகொண்டு, வாழ்க்கையைச் சந்தோஷமாய்க்கழிக்க வேண்டிய ஏழைகளும் இருக்கிறார்களே, இல்லையா?

நீங்கள் கம்ப இராமாயணத்தையும், சேக்கிழாரையும் படித்துக்கொண்டிருங்கள். அயோத்தியிலிருந்து புறப்பட்ட இராமன் இலங்கைபோய் அரக்கனிடம் நடத்திய யுத்தத்தைப்பற்றியே தாங்கள் அநவரதமும் கவலைகொண்டிருங்கள். வேண்டாமென்றுசொல்லவில்லை. இப்போது உலகத்தில் என்னென்னவோ நடந்துகொண்டிருக்கின்றனவே, இவற்றைப்பற்றியெல்லாம் அறிய வேண்டுமென்று அநேகருக்கு ஆசையாயிருக்கிறது. இராம இராவண யுத்தத்தோடு உலகத்தின் கதை முடிந்துவிடவில்லை. பண்டிதர்கதை பூர்த்தியாகிவிடலாம். ஆனால், உலகத்தின் கதை ரொம்ப ரொம்பநீளமானது. மனிதவருக்கம்வாழ வாழ உலகத்தின் கதை நீளநீளப்போய்க் கொண்டிருக்கிறது. இராம இராவண யுத்தம்போல் அவ்வளவு ருசியில்லாதிருக்கலாம். ஆனாலும், இதோ இருக்கிறதே உலகம்; அதிலிருக்கும்நாமும், அதுவும் இயங்கிக்கொண்டேயிருக்கிறோமே. போனதைப்பற்றிப்பேசுவோம். ஆனால், நடப்பதற்கு உயிர்கொடுக்கும்பேச்சு. அப்படியில்லாவிட்டால், போனதை மறந்துவிடுவதுகூட மேலாயிருக்கும் என்றுதான் தோன்றுகிறது.

தேவை.

தமிழ் வாசிக்கத்தெரிந்தவர்களாய் சென்னை இராஜதானியில் எல்லா கிராமங்களுக்கும் (அவரவரிடத்திலேயே) இன்ஸ்பெக்டர்கள் தேவை. சம்பளம் ரூ. 20 முதல் 40 வரை கொடுக்கப்படும். டிபாசிட் ரூ. 100 கட்டவேண்டும். வேலை வேண்டாதபோது திரும்பகொடுக்கப்படும். வேறு வேலையிலிருந்தாலும் இதனையும் பார்க்கலாம். சேருபவர்கள் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்புடன்எழுதவும். பெண்களும் மேற்கண்டபதவியில் சேரலாம். விலாசம்: P. G. கண்ணன் U. Cor. சூப்பிரன்டெண்டு. மாணம்பேட்டை, (Via) எனங்குடி, நன்னிலம். S. I. R.

திருமங்கலக்குடி

9—1—45ல் பிரைமரி முஸ்லீம் லீக்கின் ஆதரவில் ஆலிஜனாப் முகம்மது இப்ராஹீம் தலைமையில் காயிதே ஆஜம் ஜனாப் ஜின்னாவின் 69-வது பிறந்த தின விழா கொண்டாடியபோது குடந்தை தோழர் K. K. நீலமேகம் முதலியோர் பாகிஸ்தான் என்பதுபற்றி விளக்கிப் பேசினர்.

திருச்சி

15-1-45ல் இந்நகர் திராவிடர் கழகக் கமிட்டிக்கூட்டம் தோழர் N. சங்கரன் தலைமையிற்கூடி C. D. நாயகம் பிரிவு பற்றி அனுதாபமும், இன்னும்பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சேலத்தில்
எஸ். இராமநாதன்

31–1–45ல் மாஜி அமைச்சர் கனம் S. இராமநாதன் அவர்களுக்கு தேவாங்க பாடசாலை மண்டபத்தில் சு. ம. சங்கத் தலைவர்தோழர் M. R. சித்தையன் தலைமையில் நடந்த கூட்டத்தின்போது நகர திராவிட கழகம், செவ்வாய்பேட்டை, அரிசிபாளையம் திராவிடகழகங்கள், பெரியார் கழகம், சுயமரியாதைச்சங்கம்ஆகியவைகள் வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தன. அவைகளுக்கு பதில் அளிக்குமுறையில்தோழர் இராமநாதன் அவர்கள், உலகத்திலேயே சுயமரியாதை இயக்கம்தான் என்றும் நின்று நிலைக்கூடியதென்றும், அதன்கொள்கைகளை, இந்தியர் என்? உலகமே ஏற்றுக்கொள்ளக்கூடியதென்றும், காந்தீயக்கொடுமைகளை ஒழிக்கவேண்டுமென்றும்; அவைகள் எதிர்காலத்தில்மடிவது நிச்சயமென்றும், திராவிடநாட்டைத் திராவிடர்பெறுவது எளிது என்றும், யுத்தம் முடிந்தபின்பெற்றே தீருவோமென்றும், தற்போது வெளிப்படையாகப் பார்ப்பனர்கள் தங்களுக்கென ஒருசங்கம் அமைத்துக்கொண்டது திராவிடர்களுக்கு பெரும்வெற்றிக்கறிகுறி என்றும் விரிவாகப்பேசினார். எழுதியனுப்பிய கேள்விகளுக்குத் தக்கபடி பதிலளித்தார்.

மாலை, கல்லூரிஹாலில்ஆங்கிலப்பேராசிரியர் திரு அச்சுதன் நாயர், M.A., அவர்கள் தலைமையில் காந்தீயக்கொள்கைகள், காங்கிரஸ் தலைவர்களின் தேசபக்தம் என்பவைகளைச் சுமார் 1-30 மணி நேரம் விளக்கமாக ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். பிறகுமார்க்கெட்மைதானத்தில்[தோழர் K. ஜகதீசசெட்டியார் தலைமையில்] நடந்த மாபெரும்பொதுக் கூட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள், தொழிலாளிகள் குறைகள், அவர்களது எதிர்காலம் பற்றிச் சொற்பொழிவாற்றினார். நெசவுத்தொழிலாளர்களைப்பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கூட்டம் இனிது கலைந்தது.

திருச்சி

29—1—45ல் பகுத்தறிவு வாசகசாலையின் ஆதரவில் குடந்தைத் தோழர் ஜி. சண்முகம் தலைமையில் நாகம்மையார் திராவிடர்கழகத்திறப்புவிழா நடந்தபோது பொன்மலைத் தோழர் சந்திர நாராயணசாமி, வாடிப்பட்டி கொங்கணன், தெம்மாப்பட்டி தர்மலிங்கம், துறையூர் து. மா. பெரியசாமி, (மாணவர்) ஆகியோர் "கழக நோக்கமும் மக்கள்கடமையும் என்பதுபற்றி விரிவுரையாற்றினர்.

புது மொழிகள்

உண்மைத்தோழன் நமது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொண்டு இன்பத்தைப் பெருக்கி இன்னல்களைப் போக்கவும் முயல்கிறான். துணையற்றவாழ்க்கை ஒரு வரண்ட பாலைவனம்—தனிமையில் வாழவிரும்புகிறவன் ஒரு ஞானியாகவோ அல்லது மிருகமாகவோதான் இருக்கவேண்டும். நல்லசிநேகிதன் இல்லாதஒருவன் தன்இனத்தையே வெட்டிவிழுங்கும் அரக்கனாகின்றான். தோழர்கள்தான் கண்கண்ட தெய்வங்கள்.

[பிரான்சிஸ் பேகன்]

சிலவருஷங்களுக்கு முன்னால் வரை ஜனங்கள், அரசனிடமோ, புரோகிதனிடமோ எதிர்த்துப்பேசப் பயந்தார்கள், சமயக்கொள்கையைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும் பயந்தார்கள், ஒருநூலை மறுக்கவும், ஒரு கோட்பாட்டைக் கண்டிக்கவும், தர்க்கரீதியாகப் பேசவும், சுயமாகச் சிந்திக்கவும் பயந்தார்கள். செல்வத்துக்கு முன்னே தலைகுனிந்தார்கள். பட்டங்களுக்கு முன்னே பணிந்தார்கள். ஆனால் இவையெல்லாம் இப்போது மெதுமெதுவாக, ஆனால் நிச்சயமாகமாறிக்கொண்டு வருகின்றன. பணக்காரன் என்ற காரணத்திற்காக ஒருமனிதனை இப்பொழுது நாம் வணங்குவதில்லை.

[இங்கர்சால்]

"நான் செய்யவேண்டியதென்னஎன்பதே எனது கவனம். மாந்தர் என்ன நினைக்கின்றார் என்பதன்று.

—எமர்ஸன்

அன்பு, ஆதரிப்பு,பராமரிப்பு-இவையே பெண்ணுக்குரிய கலைகளாயிருந்திருக்கின்றன. இவற்றிலே அவள்பெற்ற திறமையை, அவள்வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் செயலிலும் காணலாம். பெண்ணின் மனமும் செயலும் மலரும் மணமும்போல், பிரிக்கமுடியாதபடி ஒன்றாகிவிட்டன. தாய்மை என்ற ஒரு தத்துவம் அமைடமாறு பெண்படைக்கப்பட்டிருக்கிறாள். ஆடவனுக்கு அத்தகைய அமைப்பொன்றும் இல்லை. ஆகவே, அவள் பூரண உண்மை அழகைப்பெறுவதைப்போல்இவனால் பெறமுடிகிறதில்லை.

—தாகூர்

ஒரு தேசம் சிந்திக்கத்தொடங்கி விடுமானால் அதன் வேகத்தை நிறுத்த யாராலும் முடியாது.

—வால்ட்டேர்.

மனோபலவீனம் உள்ள மனிதன் நாணல் தட்டைக்குச்சமம்; அதுகாற்றடிக்கும் பக்கமெல்லாம் வளையும்.

-ஓர் அறிஞன்.

ஆசையை அடக்கவேண்டுமானால் அதற்கு இணங்கவேண்டுவதுதான்சிறந்த வழி.

-ஆஸ்கார் ஒயில்டு.

கல்விமான் எப்படியிருப்பான் என்ற லட்சணத்தைச் சொல்லும்படி பற்பல பிரபலஸ்தர்களை ஓர் ஆங்கிலப்பத்திரிகை கேட்டிருந்தது. பலர் பலவிதமானபதில்களைச்சொன்னார்கள். பெர்னாட்ஷாவின் பதில்தான் விசித்திரமானது. "மன்னியுங்கள், நான் இன்னும் அப்படிப்பட்ட ஓர் ஆசாமியைச் சந்திக்கவில்லை" என்றார் பெர்னாட்ஷா.

பம்பாய்

28—1—45ல் தாராவி தமிழ் நாடு பகுத்தறிவு நிலைய முதல் ஆண்டு நிறைவிழா தோழர் எம். ஜி. பேக்கே தலைமையில் புதுவைத் தோழர் வேலுச்சாமியின் இன்னிசை விருந்து இனிது நடந்த பின் போட்டிப்பரிசுப்பேச்சாளர்களான தோழர்கள் டி. ஆர். சவரிமுத்து, ஆர். எஸ். சிவன், எஸ். தியாகராசன், ஆகியோர் "பெரியார் சேவை" என்பதுபற்றியும், தோழர்கள் எஸ். பி. சுந்தரவேல், எஸ். ஆறுமுக நயினார், எம். கே. சந்தனராஜ் முதலியோர் "பகுத்தறிவு" என்பதுபற்றியும் சொற்போராற்றியதில் முதற்பரிசு தமிழர் தலைவர் என்னும் நூலைத் தோழர் ஆர். எஸ். சிவனுக்கும், 2-வது பரிசு கடவுள் எனும் நூலைத் தோழர் எஸ். பி. சுந்தரவேலுக்கும் தலைவரால் வழங்கப்பட்டபிறகு, ஷை நிலையத்தின் பெயர் தமிழ்நாடு என்றிருப்பதைத் திராவிடநாடு எனத்திருத்தியமைக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுத் தேநீர்விருந்துடன் விழா இனிது முடிந்தது.

சீர்திருத்தத் திருமணம்.

28—1—45ல் திருப்பத்தூர் ஸ்டார் போட்டோஸ்டுடியோ சொந்தக்காரர் தோழர். ஜி. வெங்கடாசலத்திற்கும் தோழியர். இலட்சுமி அம்மையாருக்கும் "திராவிட நாடு" ஆசிரியர் தோழர். சி. என். அண்ணாத்துரை எம். ஏ; அவர்கள் சீரியதலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடந்தேறியபோது திருமணம் எனும் பொருள்பற்றித் தோழர்கள்: ஜி. சாமிநாயுடு பி. ஏ; பி. எல்; பி. பெரியசாமிபிள்ளை பி. ஏ; பி. எல்; தவமணிராசன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். இறுதியாக மணமகனால் வந்தோருபசாரம் கூறப்பட்டுத் திருமணம் இனிதுமுடிவுற்றது. ஷை திருமணத்தை முன்னிட்டு "திராவிட நாடு" பத்திரிகைக்கு ரூபாய் ஐந்து அன்புடனளிக்கப்பட்டது.

ஆறகளூர்

14-1-45ல் இவ்வூர் தோழர் அருளானந்தம் தலைமையில் கூடிய கூட்டத்தில் தோழர் எழில்நிலவன் திராவிட நாட்டுப் பிரிவினைப்பற்றி விளக்கமாகப் பேசினார்.

பசிபிக் உறவுக் கழகம்

பசிபிக் பிராந்தியத்தில் வாழும் மக்களின் நிலைமையை, அவர்களின் பரஸ்பர உறவை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆராய்வதற்காக, 1925-ம்வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட பசிபிக் உறவுக் கழகம், வர்ஜீனியாவில் ஹாட்ஸ்பிரிங்ஸ் என்னுமிடத்தில் ஜனவரி 6—17உ களில்கூடியது.

ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், இந்தியா, நெதர்லண்ட்ஸ், நியூஜீலாந்து, பிலிப்பைன்ஸ், பிரிட்டன், அமெரிக்கா போன்ற இடங்களிலிருந்து நிபுணர்கள் வந்துகூடி, ஜப்பானின் எதிர்காலம் பசிபிக் நாடுகளின் பொருளாதார மீட்சியும், அபிவிருத்தியும், கலாசார, ஜாதி உறவுகள், காலனிகள், மாண்டேட் தீவுகள் முதலியவைகளின்எதிர்காலம், அவைகளின் கூட்டுத் தற்காப்பு, இவைபோன்றபிரச்னைகள்பற்றி சர்ச்சை செய்தார்கள்.

பசிபிக் உறவுக்கழகம் சர்க்கார்சம்பந்தமும், அரசியல் சம்பந்தமுமில்லாத ஒரு தனிப்பட்ட ஸ்தாபனமாகும்.

இக்கழகம் பசிபிக் பிராந்தியம், கீழ்க்கோடி நாடுகள் சம்பந்தமான அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்னைகளைப் பற்றிவிரிவான ஆராய்ச்சிகளை நடத்துகிறது. மூன்று மாதத்துக்கொரு தடவை "பசிபிக் அபேர்ஸ்"; என்னும் சஞ்சிகையொன்றைப் பிரசுரிப்பதுடன், ஆராய்ச்சிகளின் முடிவுகளைப்பற்றிப் பல தாள்களையும், புத்தகங்களையும் இது வெளியிடுகிறது.

கழகத்தில் தேசிய கௌன்சிலாருடன் பிரதிநிதித்துவம் வகிக்கும் நாடுகள் பின்வருவன:— ஆஸ்திரேலியா, கனடா, சீனா, நெதர்லண்ட்ஸ், நியூஜீலாந்து, பிலிப்பைன்ஸ், பிரிட்டன், ரஷ்யா, அமெரிக்கா, பிரெஞ்சு, இந்திய பிரதிநிதிகள் அழைப்பின்பேரில் கூட்டங்களில் கலந்து கொள்ளுகிறார்கள்.

தற்பொழுதுள்ள ஜப்பானிய—சோவியத் உறவுக்கு ஒவ்வாத சில விஷயங்கள் சர்ச்சை செய்யப்படுவதால் இந்த சந்தர்ப்பத்தில் ரஷ்யாவுக்கு பிரதிநிதித்துவம் ஒன்றும் இல்லை.

குடந்தை

28—1—45ல் ஷையூர் தியாகராயர் செந்தமிழ்ப்படிப்பகத்தின் 8-வது ஆண்டு நிறைவிழா திருச்சி வழக்கறிஞர் தோழர் டி. பி. வேதாச்சலம் தலைமையில் நடந்தது. மாலைப் பொதுக் கூட்டத்தில் காஞ்சி கலியாணசுந்தரனார், சேலம், வேலூர் உயர் நிலைப்பள்ளி தமிழாசிரியர் பொன்னம்பலனார், கோ. சி. பெரியசாமிப்புலவர் கே. கே. நீலமேகம் மற்றும் பல தோழர்களும் பேசியபின் கூட்டம் இனிது முடிந்தது.

குற்றத்தை மறைக்கும்

2-ம் பக்கத் தொடர்ச்சி

சம்பந்தர் சிவனுடைய அருளைப்பெற்றுத் தோடுடையசெவியன் என்பதை முதலாகக்கொண்டு பதிகம் பாடியது போல், சேக்கிழாரும் பெரியபுராணத்தைப்பாடினுர்என்று நினைக்கிறீர்கள்? அதுதான்கிடையாது. சேக்கிழார்பாடிய பெரியபுராணம் வழிநூலேயன்றி முதல் நூலன்று. முதல்நூலைப்பாடியவர் திருநாரையூர் நம்பியாண்டார்நம்பி என்பவர். இவரும் சம்பந்தருக்கொத்த சரிநிகர் பெருமையுடையவர். சம்பந்தரைப் போலவே இவரும் தமதுகுழந்தைப் பருவத்திலேயே திருநாரையூரிலுள்ள பொல்லாப்பிள்ளையாரின் அருளைப்பெற்றுச், சிதம்பரக்கோயிலிலுள்ள ஒரு அறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த தேவாரத் திருமறையைக் கண்டெடுத்ததோடு, பொல்லாப்பிள்ளையாரால் திருத்தொண்டர் வரலாற்றினையும் அருளிச்செய்யப் பெற்றுத், திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலையும் பாடியவர். இந்த நூலை ஆதாரமாகவைத்தே சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடினுர். எனவே, நம்பியாண்டார் நம்பியே இங்கு முதன்மையாகவைத்துப் பேசப்படவேண்டியவரே யன்றிச் சேக்கிழாரன்று. இதனுல், நான் சேக்கிழாரைச் சிறுமைப்படுத்துவதாகக் கருதவேண்டாம். எனக்கும் சேக்கிழாரிடத்தில் ஓரளவுக்கு மதிப்புண்டு. ஆனுல், நீங்கள் இங்கு பேசிக்கொண்டிருப்பதைப்பார்த்தபோது, உங்களுடையநோக்கம் தோடுடையசெவியன் என்பதைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கியுள்ளீர்கள் என்பது தெரியவந்தது. தோடுடைய செவியன் என்ற பாடலையும் ஏனைத் தேவாரத்திருமுறைகளையும் நீங்களும் நானும் மற்றுமுள்ள சைவமெய்யன்பர்களும் தெரிந்துகொள்ளும்படிசெய்தவர், இப்போது நான்குறிப்பிட்ட நம்பியாண்டார் நம்பியேயாவர். பொல்லாப்பிள்ளையாரின் திருவருள் நம்பிக்குக்கிடைக்கவில்லையானுல்; தேவாரமேது? திருமுறை ஏது? நான் ஏது நீங்கள் ஏது? சைவம் ஏது? உங்கள்உரையாடல் ஏது? ஒன்றுமேஇருந்திருக்காது. என்வேதான், உங்கள் பேச்சுக்கு அடிப்படைக்காரணமாயுள்ள நம்பியாண்டார் நம்பியைப்பற்றி நான் இங்கு குறிப்பிட்டேனேயன்றி வேறொன்றுக்குமாகவல்ல" என்றுர். இவருடைய பேச்சைக்கேட்டதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது போலாயிற்று. இதேது பெரியதொல்லையாகவந்து முடிந்துவிட்டது. நான் ஏதோ இந்தப் பெரியபுராணத்தைமட்டும் ஓரளவுக்கு ஆராய்ச்சிசெய்து முடிக்கலாம் என்றிருந்தேன். இப்பெரியவர் கூறியதைப்பார்த்தால், பெரியபுராணத்தை மட்டும் ஆராய்ந்துவிட்டால்போதாது; பெரிய புராணசாரமாகிய திருத்தொண்டர் திருவந்தாதியைப்பாடிய நம்பியாண்டார் நம்பியைப்பற்றியும், நம்பிக்குஅருள்புரிந்த பொல்லாப்பிள்ளையாரைப்பற்றியும், நம்பியாண்டார் நம்பியால் கண்டுபிடிக்கப்பட்டதாகச்சொல்லப்படும் திருமுறை கண்ட திருவிளையாடலைப் பற்றியும் ஆராய்ந்தால்தான், பெரியபுராணத்தை ஆராய்ந்ததற்கு ஒரு நல்லமுடிவும் பயனும் ஏற்படும் என்றுஎனக்குத்தோன்றியது. என்றுலும், இவைபற்றி இப்போது ஆராயத்தொடங்கினுல், நாம் இங்கு எடுத்துக்கொண்ட ஆராய்ச்சி சிதைந்து, படிப்பவர்க்கு மயக்கத்தை உண்டாக்கிவிடுமோ என்ற அச்சத்தால், அவைபற்றிய ஆராய்ச்சியை அப்பால் நடத்தலாம் என்ற முடிவு, தோடுடைய செவியனைத் தொடர்ந்துமுடிக்கும்படி செய்துவிட்டது.

எனவே, சம்பந்தருக்குப் பால் கொடுத்த சிவன் யாராய்இருக்கலாம்என்பதுபற்றிய ஆராய்ச்சியில் கருத்தைச் செலுத்தாமல், சம்பந்தர்கூறும் தோடுடையசெவியனே அவருக்குப் பால் கொடுத்தார் என்பதையே உண்மையெனக்கொண்டு ஆராயும்போது, அதிலும் பல ஐயப்பாடுகள் எழுகின்றன. எப்படியென்றுல், சம்பந்தரால் குறிப்பிடப்பட்ட தோடுடையசெவியனிடம் பால் ஏது? ஒருபாதிஆணும்மறுபாதிபெண்ணுமாகக் காட்சியளிக்கும் ஒரு வடிவத்தில் குழந்தைக்குரிய பால் கிடைக்குமா? அல்லது அத்தகைய ஒருவடிவத்தில் பால் உண்டாக ஏதுவுண்டா? பால் உண்டாவதற்குரிய உடற்கருவியமைப்புக்கள் சரிவர அமையப்பெறுத ஒருவடிவத்திலிருந்து பால் யாங்ஙனம் உண்டாகும்? ஆணும் பெண்ணும்கலந்த ஒருவடிவம் இருப்பதே இயற்கைக்குமாறு! இயற்கையைக்கூட மாற்றியமைக்கும் ஆற்றல் இறைவனுக்கு உண்டென்றுல்; ஆணையும் பெண்ணையும் ஒரேவடிவத்தில்காட்டி "நானே இவ்வுலகுக்கு இறைவன், நீங்களும்மற்றும் உலகிற்காணப்படும்பொருள் அனைத்தும் என்னுடைய படைப்பே" என்று கூறுமானுல், தன்னைப்போலவே ஏனைஉயிர்களையும் ஆணிற்பாதியும்பெண்ணிற்பாதியுமாக ஒரேவடிவத்தில் படைத்திருக்கலாமே! அங்ஙனம்செய்வதைவிட்டுத், தன்னைமட்டும் ஆணும் பெண்ணுமான ஒருவடிவத்தில் காட்டிக்கொள்வதும், மற்ற உயிர்களை ஆண்வேறு, பெண்வேறுகத் தனித்தனி வடிவங்களால் பிரித்துப்படைப்பதும், ஆணுக்கு ஒருதன்மையும் பெண்ணுக்கு ஒரு தன்மையுமாக உடலமைப்புக்களை உண்டாக்குவதும், அங்ஙனம் அமையப்பெற்ற உடலமைப்புக்களில், ஆணுக்கொருவேலையும் பெண்ணுக்கொரு வேலையுமாகவகுத்துக் காட்டுவதும், பின்னர் ஆணும் பெண்ணும் தனித்தனியே செய்யவேண்டிய வேலைகளை, "ஆணும்பெண்ணும் ஒரு வடிவமாக அமைந்துள்ளஎன்னுல்செய்துகாட்டமுடியும்" என்று எள்ளிநகையாடத்தகுந்த ஏமாற்றுக்காரியங்களைச் செய்துகாட்டுவதுமான கோமாளிக்கூத்துக்களை இந்தக்கடவுள் ஏன்செய்தல் வேண்டும்?

பெண்ணுய்ப்பிறந்தஒருவள், ஒருஆணுடன் சேர்ந்து கருவுற்றுப் பிள்ளைபெற்ற பின்னரே, அவளிடம்காணப்பெறும்குழந்தைப்பால், ஆணும் பெண்ணுமாக அமைந்துள்ள ஒருவடிவத்தில்—ஆணும் பெண்ணும் சேர்ந்து கருவுற்றுப் பிள்ளை பெறமுடியாத முறையில் அமைந்துள்ள ஒரு வடிவத்தில் இருந்ததென்றும், அது சம்பந்தரின் பசியைமாற்ற உதவிற்றென்றும் கூறுவதற்கும், கோழிப்பால் கொண்டு குதிரைக்கொம்பு கழுவப்பட்டதென்று ஒருவன் கூறுவதற்கும் யாதாயினும் வேறுபாடு காணமுடியுமா, கூறுங்கள் அன்பர்களே!

இனிச், சம்பந்தர் பாடியதாகச்சொல்லப்படும் தோடுடைய செவியன் என்ற பாடல், அவருடையதந்தை சிவபாதவிருதயர், 'நீ யார் தந்தபாலை உண்டாய்?' என்றுகேட்ட கேள்விக்கு விடையாகச் சொல்லப்பட்டதென்பதை முன்னரே எடுத்துக்காட்டியுள்ளேன். இந்தவிடை கேள்விக்குப் பொருத்தமாய் இருந்தபோதிலும், சம்பந்தர் கூறிய முறையில் தவறு இருப்பதாகவே தெரிகிறது. எப்படியென்றுல், சம்பந்தருக்குப் பால் கொடுத்தவடிவம் ஆணும் பெண்ணும் கலந்த ஒரு அலங்கோல வடிவமேயாகும். ஆனுல், சம்பந்தரின் விடையில் அந்தவடிவத்திற்குரிய சரியானபெயர் குறிக்கப்படவேயில்லை. அவர் குறிப்பிடுவதைப் பார்த்தால், தமக்குப்பால் கொடுத்தவர் தோடுடைய செவியைஉடைய ஒருவடிவமல்ல வென்பதும், ஒரு ஆணே அதனைச் செய்தார் என்பதும்நன்கு தெரியக்கிடக்கிறது. எப்படியென்றுல்,

> "தோடுடைய செவியன் விடையேறி
> யோர் தூவெண்மதி சூடிக்,
> காடுடைய சுடலைப்பொடி பூசி
> யென் உள்ளங்கவர் கள்வன்,
> ஏடுடைய மலரான் முனைநாட்
> பணிந்தேத்த அருள்செய்த,
> பீடுடைய பிரமாபுர மேவிய
> பெம்மான் இவன் அன்றே".

என்ற இப்பாடலே சிவபாத விருதயரின் கேள்விக்கு விடையாகச் சம்பந்தரால் கூறப்பட்டதாகும். இப்பாடலில் வரும் சொற்கள் ஒரு ஆணைக்குறிக்கின்றனவே யன்றி, ஆணும் பெண்ணும்கலந்த ஒரு வடிவத்தின் பெயரைக்குறிக்கவேயில்லை. இப்பாடலிற் காணப்படும் செவியன், கள்வன், பெம்மான், இவன் என்ற சொற்கள், ஒரு ஆணைக் குறிக்கின்றனவா? அல்லது ஆணும் பெண்ணும் கலந்த ஒரு வடிவத்தைக் குறிக்கின்றனவா? என்பதற்குத் தமிழ் இலக்கணம் படித்த சைவமெய்யன்பர்கள்தாம்விடை

(12-ம் பக்கம் பார்க்க)

குற்றத்தை மறைக்கும்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுதல் வேண்டும். அவன் என்று ஆணையும், அவள் என்று பெண்ணையும், அது வென்று மற்றவற்றையும் வகுத்துக்கூறப் படும்இம்முப்பெரும் பிரிவுகளிலும்அடங்காத இவ்வடிவத்திற்கு ஆண்தன்மை கற்பித்துக்கூறுதல் முறையாகுமா? ஒரு வடிவம் எந்த முறையில் அமைந்துள்ளதோ, அந்த அமைப்பு முறைக்கேற்ற பெயரையன்ரோ அவ்வடிவத்திற்குப் பொருந்திக் கூறவேண்டும். அங்ஙனமின்றி, ஆணும் பெண்ணும் கலந்த ஒரு அலங்கோல வடிவத்திற்கு ஆண்தன்மை கற்பித்து அழகு படுத்திக்கூறுவது அறிவுடைமையாகாது என்பது மட்டுமல்ல, அடாதசெயல் என்றும் கூறுவோம்.

ஒருக்கால், 'சம்பந்தர் அங்ஙனம்கூறியதில் தவறில்லை, சம்பந்தன் அறிவுபெருத சிறுவன்தானே, அவனுக்குப் பால் கொடுக்கவந்தவர் ஆணிற்பாதியும் பெண்ணிற்பாதியுமாக வந்தார், அதனல், வந்தவர் ஆணு பெண்ணு என்று தெரிந்துகொள்ளமுடியாத நிலையிலிருந்த சம்பந்தர், அந்த வடிவத்தை ஆண் என்றே நினைத்திருப்பார், இதுஒருகுற்றமாகுமா? என்று யாராவது கேட்டால் என்செய்வதென்ற கலக்கம் எனக்கில்லை. இதோ சேக்கிழார்வருகிருர்எனக்குத்துணையாக. தோடுடைய செவியை உடைய வடிவத்தால் கொடுக்கப்பட்ட பாலைஉண்டஅதே விநாடியில்,

"சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்,
பவமதனை அறமாற்றும் பாங்கினில்
ஓங்கிய ஞானம்,
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்,
தவமுதல்வர் சம்பந்தர் தாம்
உணர்ந்தார் அந்நிலையில்."

என்பது சேக்கிழார் கூறும் உண்மை. இவ்வுண்மை, பாலுண்ட பின்னர் சம்பந்தர் எல்லாவித அறிவையும் ஒருங்கே ஒரு விநாடியிலேயே பெற்றுவிட்டார் என்பதை நன்கு வலியுறுத்துவதாலும், அவர் தோடுடைய செவியன்என்று பாடியதும் இவ்வறிவைப் பெற்ற பின்னரே என்ற உண்மை பெறப்படுவதாலும், அவருக்கு அறிவில் தடுமாற்றம் இருந்திருக்க முடியாதென்பது பெறப்படுகின்றது.

எனவே, சிவனருளால் நல்லறிவைப் பெற்றுத்தேர்ந்த சம்பந்தர் தாம் பாடிய பாட்டில் இவ்வளவு குற்றங்களுக்குஇடம் வைத்திருப்பதைப்பார்த்தால், கடவுளுடைய அருளைப்பெற்றுப் பாடப்பட்ட பாடல்கள் எத்துணைக்குற்றங்களை உள்ளடக்கியவையாயிருந்தபோதிலும் மக்கள் அவற்றில் குற்றங்காணுவது கடவுளாணையைமீறிய செயலாகுமென்று கடவுளன்பர்கள் கருதுவார்களானல், நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றங்குற்றமேயென்று கூசாது கூறிய அறிஞரின் அறவுரைகளைப்பின்பற்றிய மக்கள் அதனை ஒருபோதும் பொருட்படுத்தமாட்டார்கள். எது எப்படியாயினும், இச் சொல்லப்பட்ட பாடலுக்குச் சைவப்புலவர்கள் இலக்கணவரம்பை யமைத்துக்காட்டிய போதிலும்—பண் அமைப்புமுறையைப் பாகுபடுத்திக்காட்டியபோதிலும் அதன் கண் செறிந்துள்ள பொருட்குற்றங்களுக்கு எந்தவிதமான மாற்றமும் காட்ட முடியாதென்பதைவலியுறுத்திக்கூறுகின்றேன். ஒருக்கால், ஒரு நிகழ்ச்சியில் வரும் ஆண் பெண் இருவரில், ஆணை முன்னிலைப்படுத்திக்கூறுவதேமரபுஎன்றும் சிலர் கூறமுன்வரலாம். ஆனல் ஒருநிகழ்ச்சியில் பேசப்படும் ஆண் பெண் இருவரில் ஆணுக்குமட்டும் உயர்வளித்து அவனை முன்னிலைப்படுத்திக்கூறும் வழக்கம் ஆரியர்களுடையதேயன்றி, ஆண் பெண் ஆகிய இருவருக்கும் சரிநிகர் சமமான நிலையளித்து, அவர்களுள் உயர்வு தாழ்வு காணுத தமிழ்ப்பெருமக்கள், ஆண்பெண் ஆகிய இருவரும் எந்தெந்தக்காலத்தில் எந்தெந்தக் காரியங்களைச் செய்கின்றனரோ, அச்செய்யப்பட்ட காரியங்களுள் எது முதலிடம் பெறுகின்றதோ அதைச் செய்தவர் ஆணுயிருந்தால் ஆணுக்கு முதலிடமும், அதைச்செய்தவர்பெண்ணு யிருந்தால் அன்னவருக்கு முதலிடமும் கொடுப்பதே தூய தமிழர்மரபுஆகுமென் பதையும் ஈண்டு வலியுறுத்திக் கூறுகின் றேன்.

எனவே, இதுகாறும்நாம் தோடுடைய செவியன் என்பதற்குச் செய்துள்ள ஆராய்ச்சி முடிபுகளில் ஏதாவது தவறு கண்டுபிடிக்கும் சைவ அன்பர்களுக்கு அவர்கள் அத்தவறை யெடுத்துக்காட்டு வாரானல் தக்க விடைபோதிய ஆதாரத் துடன் தரப்படுமென்பதைத் தெரிவித் துக்கொண்டு, தோடுடையசெவியன்என் பதுபற்றிய, ஆராய்ச்சியை இவ்வளவில் முடித்து, செவியன் என்ற சொல்லை என் அப்பாடலில் சம்பந்தர் புகுத்திப் பாடினுர் என்பதற்குச் சைவ அன்பர்கள் கூறும் இன்னெருகாரணத்தையும் அதற் குரிய எமது ஆராய்ச்சிக்குறிப்புக்களையும் இனித்தொடர்ந்து எழுதுவாம்.

சென்னை

17-12-44ல் புரசைத் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தைத் திராவிடர் கழகமென திருத்தியமைக்கப்பட்டுக்க கக்குழுவினர்களும்தேர்ந்தெடுக்கப்பட் னர்.

கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயாரிக்கும்

கிளி மார்க் பட்டணம் பொடி.

தென்னிந்தியா எங்கும் புகழ்பெற்றது. காரம், மணம், நிறம், வாடை கமழும், எமது கிளிமார்க் பட்டணம் பொடியை உபயோகியுங்கள்! ஒருமுறை உபயோகித்தால் என்றும் நீங்காது ஞாபகம்.

விலை விபரம்:— நீ-1. பவுன்கலர் விசை 1-க்கு ரூ. 10—0—0.
நீ-1. கருப்புநிறம் விசை 1-க்கு ரூ. 9—0—0.

ஏஜண்டு இல்லா ஊர்களில் ஏஜண்டு தேவை.

ஏ. எஸ். ராஜன் கம்பெனி,
பழையவண்ணாரப்பேட்டை சென்னை

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet Conjeeveram